[illegible]

[illegible] [illegible]

Sep 1934


JL

O94:11, N27 5N
1934.8.2.

186943

580

No. M. 2302.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

சைவமுந் தமிழுந் தழைத்தினி தோங்குக.



OFFICE OF THE REGISTRAR OF BOOKS
29 OCT 1934
MADRAS

# சிவநேசன்

## செந்தமிழ்த் திங்கள் வெளியீடு.

ஆண்டு ௮ § பலவான்குடி—பவ—புரட்டாதி § திங்கள் ௨. ௨


| எண் | உள்ளுறை | பக்கம். |
|---|---|---|
| ௧. | பலவான்குடி மணிவாசக சங்கத்திருவிழா ... | 25 |
| ௨. | நன்கொடை ... | 26 |
| ௩. | சிவநேசனுக்கு மதிப்புரையும் வாழ்த்தும், ... | ,, |
| ௪. | எலுமிச்சபழ ரசம் ... | 28 |
| ௫. | தன்சரிதம் உணர்த்தும் தம்பிரான் றோழர் ... | 29 |
| ௬. | தாயுமானவர் தத்துவவிளக்கம் ... | 37 |
| ௭. | அம்மை அப்பர் ... | 41 |
| ௮. | செந்தமிழ் செழிக்கும் வழி ... | 43 |
| ௯. | தெய்வ மூர்த்த தத்துவார்த்தம் ... | 44 |
| ௰. | தாம்பூலந் தரித்தல் ... | 47 |
| ௧௧. | முன்னுரை | (1—2) |
| ௧௨. | பழமலைக் கோவை | (81—88) |
| ௧௩. | தேவிகாலோத்தர ஆகமம் | (9—16) |


ஆசிரியர் ராம. த. ராம. இராமசாமி செட்டியார்,
பலவான்குடி.

# செய்தித் திரட்டு.

**உள்ளூர்:**—குமாரவிநாயகர் திருக்கோயிலில், ஆவணி ௭௳ சதுர்த்தசியன்று நடராஜர் அபிடேகம் நடைபெற்றது. ௧௪௳ வியாழக்கிழமை பரணி நாள், திருவாசக பாடசாலையின் ஆதிகுருமூர்த்தியாகிய கோவிந்தசாமி சுவாமிகளின் 22-வது குருபூசை, மகேசுவர பூசையாதிய வைபவங்களுடன் சிறப்பாக நிறைவேறியது. ௨௭௳ குமாரவிநாயகர் திருக்கோயிலிலும், நகரச்சிவாலயத்திலும், விநாயக மகாசதுர்த்தி பூசை நடைபெற்று நகரச்சிவாலயத்தி லிருந்து ஷைகட்டளை உபயக்காரராகிய பெ. அ. குடும்பத்தினரால் விநாயகப்பெருமானாரின் திருவுலாவும் சிறப்புறச் செய்யப்பெற்றது.

இம்மதி ௬௳ குமாரவிநாயகர் திருக்கோயிலில் நடராஜர் அபிடேகமும், வித்தியாலயங்களில் ௨௨௳ கிலுக்குளடுப்பு விழாவும், நகரச்சிவாலயத்தில், ௨௯௳ நவராத்திரி யாரம்பமும், ௩௦௳ மகாநவமி பூசையும், ஐப்பசி ௧௳ விஜயதசமி விழாவும் நடைபெறும்.

**விநாயகமகா சதுர்த்தி மகோற்சவம்:**—பிள்ளையார்பட்டிக் கற்பகவிநாயகருக்கும், உப்பூர் வெயிலுகந்த விநாயகருக்கும் ஆவணி ௧௮௳ தொடங்கி, ௨௭௳ வரை வழக்கம்போல் சிறப்பாக நடைபெற்றது.

**பாதரக்குடி:**—தனவணிக நகரத்தார்களுக்குச் சொந்தமான பாதரக்குடி மடாதிபதியும், திருப்புனவாயில் முதன்மையரும், பஞ்சாக்கர மந்திரோபதேச குருமூர்த்தியும் ஆன உயர்திரு வேங்கடாசலபதி குருசுவாமிகள், ஆவணி ௰௳ ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்குப் பரிபூரணதிசையடைந்தார்கள். சுவாமிகளின் வயது 83. பட்டம் வகித்திருந்த ஆண்டு 67.

**கானாடுகாத்தான்:**—யூனியன் பஞ்சாயத்துப் போர்டுத்தலைவர் திருவாளர், க. வெ. சித. வேங்கடாசலம் செட்டியாரவர்கள், இராமநாதபுரம் ஜில்லாபோர்டில், சதுர்வேத மங்கலம் தொகுதிக்கு அங்கத்தினராயினர். அறிவாற்றல் மிக்க அவர்களை எவ்வித எதிர்ப்புமின்றி யாவரும் ஏகமனதாய்த் தேர்ந்துகொண்டது மிகவும் போற்றற்குரியதே.

**கோத்தமங்கலம்:**—திருவாளர் ராம. சு. ராம. இராமன் செட்டியாரவர்கள் தம் புதல்வன் திருவளர் செல்வன் சுப்பிரமணியனுக்கு ஆவணி ௮௳ நடைபெற்ற புதுமைவீட்டில், ௭௳ புலவர் பேரவைகூடி வாழ்த்துக்கூறி,செய்யுட்களும்வழங்கினர். திருவாளர்களான. சுந்தரசாஸ்திரியார், ஏகாம்பர சிவாச்சாரியார், தில்லைநாத நாவலர், பொ. முத்தைய பிள்ளை, பொ. மு. பொன்னம்பலம் பிள்ளை, முத்துக்குமாரசாமி பிள்ளை, அ. க. பொன்னுசாமி முதலியார், சு. முருகேசமுதலியார், ஆறுமுகம் பிள்ளை, சிவநேசன் இராமசாமி செட்டியார், உ. ரா. சுவாமிநாதபிள்ளை, அ. நடேசதேசிகர், சிவலோகநாத தேசிகர், தண்டபாணி தேசிகர், சங்கரதா தேசிகர் துரைசாமி தேசிகரின் முதற்புதல்வர், முதலானவர்கள் வந்து குழுமியிருந்தனர். புலவர் பெருமக்கட்குச் சன்மானஞ் செய்யப்பெற்றது.

**பேரியாராளையம்:**—இங்கு செல்லுகின்ற பக்தர்களே! மானமுள்ள மனிதன் தன் மனைவியோடு நிர்வாணமாக வருவானா? பெண்களின் பேச்சைக் கேட்டுத் தெய்வத்துக்கு ஆடுகோழி பலியிடுதல் அறியாமை யன்றோ? பலியிடுதலை யொழித்துச் சன்மார்க்கராகிப் பாற்பொங்க லிட்டுப் படையுங்கள் எனத் தென்னிந்திய சீவரக்ஷா பிரசாரக சபையின் 219-வது வெளியீடு கூறுகின்றது.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
29 OCT 1934
MADRAS

உ
சிவமயம்.
திருச்சிற்றம்பலம்.
சைவமுந் தமிழுந் தழைத்தினி தோங்குக.

# சிவநேசன்.

## செந்தமிழ்த் திங்கள் வெளியீடு.

பலவான்குடி.

| ஆண்டு ௮ | பவ-புரட்டாதி: 1934-செப்டம்பர் | திங்கள் ௨. |
|---|---|---|

*உடையா ளுன்ற னடுவிருக்கு முடையா ணடுவு ணீயிருத்தி*
*அடியே னடுவு ளிருவீரு மிருப்ப தானா லடியேனுன்*
*அடியார் நடுவு ளிருக்கும்அரு ளைப்புரி யாய்பொன் னம்பலத்தெம்*
*முடியா முதலே யென்கருத்து முடியும் வண்ணம் முன்னின்றே.*

## பலவான்குடி மணிவாசக சங்கத் திருவிழா.

திருவருளால் இச் சங்கத்தின் இருபத்துநான்காவது ஆண்டு நிறைவுத் திருவிழா, ஆவணி-௬௳ (22-8-1934) புதன்கிழமை உத்திராடநாள், குமாரவிநாயகர் திருக்கோயில் வழிபாடு, சித்திவிநாயகர் தண்டபாணியுடன் மாணிக்கவாசகர் திருவுலா, தேவார திருவாசகக் காட்சிகளுடன், ஆளுடையார் கோயில் ஸ்தலபுராணிகர் அந்தணசிரேட்டர் சுந்தர சாஸ்திரியார் தலைமையில் அறிவாற்றல் மிக்க பெரியார்களின் விரிவுரைகள் நிகழச் சிறப்பாகநிறைவேறியது.

தலைவர்க்கு மாலைசூட்டி மேளதாள விருதுகளுடன் அவரை வரவேற்று, அக்கிராசனத் தமர்த்தி, தமிழ்மறை வாணர்களாகிய.—காரைக்குடி அ. நடேசதேசிகர், கோட்டையூர் சிவலோகநாததேசிகர், உள்ளூர் கனகசபாபதி ஓதுவார் முதலானவர்கள் தேவாரதிருப்பாசுரங்களை இன்னிசையுடன் ஓத, 'சிவநேசன்' இராமசாமி செட்டியார் தலைவரவர்களைப் பாராட்டிப் பேசி வந்தனோபசாரப் பத்திரம் வாசித்து வழங்க, திருவாளர், மெ. வெ. வேலப்பசெட்டியார் இருபத்து நான்காவதாண்டு அறிக்கை படிக்க, தலைவர் வெகு கம்பீரமாக முகவுரை கூறினர்.

முற்பகலில்: திருவாளர்களான கோ. அளகாபுரி சிதம்பரம் செட்டியார்—கோநகர், தமிழ்ப்பண்டிதர், சு. ஆழ்வாரையங்கார்—

186943

காஞ்சீபுரம், ஐயங்கார் குளம் சைவபுராணிகர், அ. க. பொன்னுசாமிமுதலியார்—தூத்துக்குடி, பிரசங்கரத்னம், பொ. மு. பொன்னம்பலம் பிள்ளை ஆகிய நால்வரும் முறையே, மாணிக்கவாசகர் மகிமை—நமக்கு வேண்டுவன—பெரியார் பெருமை—மணிவாசக மாண்பு என்பனபற்றியும், பிற்பகலில்: திருவளர் செல்வர்களான, தெ. மு. வீர. முத்துராமன்—தெ. மு. வீர. வீரப்பன்—கோநகர், பெ. சித. வி. சொக்கலிங்கம்—பெ. சித. வி. திருநாவுக்கரசு ஆகிய நால்வரும் முறையே உலவாக்கோட்டை யருளிய திருவிளையாடல்—விறகு விற்ற திருவிளையாடல்—கேள்வி—நமது நாட்டுச் சிறப்பு என்பன பற்றியும், திருவாளர்களான.—திருநாரையூர் சிவாலய தருமகருத்தர், வித்துவான் முத்துக்குமார சுவாமிபிள்ளை—தேவகோட்டை சிவாகமசங்கத்துச் சித்தாந்த போதகாசிரியர், பொ. முத்தைய பிள்ளை—புரிசை பெருஞ்சொற்கொண்டல், சு. முருகேச முதலியார்—நாகர்கோவில், திருநெறித் தொண்டர் குழாத் தலைவர், ஆறுமுகம் பிள்ளை ஆகிய நால்வரும் முறையே, நம்பியாண்டார் நம்பி—சிவபெருமான் உண்மைநிலை—சைவமும் வில்லியும்—கடவுள் ஒருவரே என்பனபற்றியும் சொன்னயம் பொருணய மாதிய பன்னயங்களும் பொங்கித் ததும்ப இன்னமுது கனிபாகு கற்கண்டு சீனி தேனினும் இனிக்கும் நன்னயமான பிரசங்கமாரி பெய்தனர். திருவாளர்களான.—சென்னை, இந்துமத தரும பரிபாலன சபைத் தலைவர் டி. கே. சிதம்பரநாத முதலியார், பாபநாசம் முத்துக்குமாரத் தம்பிரான் சுவாமிகள், ஆலங்குடி பண்டித, அ. கோபாலையர், அண்ணமலைப்பல்கலைக் கழகத் தமிழ்விரிவுரையாளர், பண்டிதமணி, மு. கதிரேசச் செட்டியார் முதலானவர்களிடமிருந்து வாழ்த்துக் கடிதங்கள் வந்தன. அனைவர்க்கும் 'சிவநேசன்' இராமசாமி செட்டியார் மனமுவந்த வந்தனங் கூறினர். உள்ளூர் அன்பர்பலர் முன்னின்றுபசரித்தனர். எல்லாவகையாலும் இனிது நிறைவேறியது.

## நன்கொடை.

கொத்தமங்கலம் திருவாளர் ராம. சு. ராம. இராமன் செட்டியாரவர்கள் சுவீகார புத்திரன் திருவளர் செல்வன் சுப்பிரமணியனுக்கு ஆவணி—௬௨ செய்த பூணூலணியில், நம் சிவநேசனுக்குரூபா பதினாறு நன்கொடை உதவியுள்ளார்கள். அவர்களும், வாழிய சுப்பிரமணியனும், அவர்கள் சந்ததிகளும், சந்ததந் தழைத்து நெடிது வாழச் செந்திற் பதிவாழ் கந்தக்கடவுள் திருவருள் பாலிப்பராக!

## சிவநேசனுக்கு மதிப்புரையும் வாழ்த்தும்.

(உலகம்பட்டி திரு. பழ. சிவ. சிவராமன் செட்டியாரவர்கள்.)

மக்கட்கு உண்மை நெறியைப் போதிக்க எழுந்த 'சிவநேசன்' பல்லாண்டு வாழ்ந்திலங்குமாறு எல்லாம் வல்ல இறைவன் திருவடிக்கமலங்களைத் தியானிக்கின்றேன்.



(பண்டிதமணி திரு. மு. கதிரேசச் செட்டியாரவர்கள்.)

'சிவநேசன்' அரும்பொருள் பல தாங்கி ஆத்திகோத்தமர்களுக்குக் கடவுண் மணங்கமழ்ந்து இன்புறுத்தி வருகின்றது. வடிவாலுங்குணத்தாலும் பயனாலும் சிவநேசன் சிறப்புற்று நாளுநாளும் வளர்ச்சியடைதலைக் கண்டு இன்புறுகின்றேன். நம் அதிழ்தினுமினிய தமிழைத் தெய்வநலங் கலந்தூட்டுவதில் 'சிவநேசன்' தலைசிறந்துளது. நீடுவாழ்க எல்லாம் வல்ல சிவபரம்பொருள் சிவநேசனைத் தம் இனிய நேசனாக நிலவுலகத்தில் விளங்கச் செய்வாராக.

(காரைக்குடி திரு. ராம. உ. ராம. இராமசாமி செட்டியாரவர்கள்.)

சிவநேச முறவேண்டிச் சிந்தை யோங்கிற்
சிவநேச னெனுந்திங்கட் டாளைப் பற்றி
சிவநேச முறுநோக்கின் யாரும் நாட
சிவநேச நாளுநா ளோங்கி மேன்மேல்
சிவநேச மாயண்ட பிண்ட மியாவும்
சிவநேசத் திருவருளாய்க் கண்டு வாழ்ந்து
சிவநேச மாஞ்சீவன் முத்த னாகிச்
சிவமாகிப் பேரின்பந் திளைத்து ளாரே.

(யாழ்ப்பாணம் தமிழ் பண்டிதர், திரு. வ. மு. இரத்திநேசுவரைய ரவர்கள்.)

செந்தமிழ்க்கோ ரச்சாணி சீர்ச்சைவ மாபாநு
அந்தமிலா நீதி அறிவுறுத்தி—நந்தம்
பவமகற்றுஞ் செம்மைச் 'சிவநேசன்' பான்மை
நவமாகக் கூறறிதா நன்கு.

தலமான்மியமுடன் றற்பரன் நாமந் தனைவிளக்கிப்
பலவான் குடிவரு பண்புயர் செல்வன் பயன்றுலக்கி
நிலமான வர்க்கொரு நீதி நிலவிட நேயமுடன்
வலமேவு சீர்ராம சாமிப் பெருந்தகை வாழுகவே.

மட்டார் கொன்றை மதியுடன் முடித்த
நட்டார் துணையாம் நம்பன தருளால்
எட்டா மாண்டில் ஈறில் சிவநெறி
முட்டா வகையின் மொழிந்து திகழ்க!
கதிர்வே லருளால் காசினி சிறக்க!
எதிர்நாத் திகரும் இறும்பூ தடைக!
முந்திய சைவ முதுநெறி தழைக்க
செந்தமி ழுடனே செகதலம் மல்கவே!

# எலுமிச்சம்பழ ரசம்.

(சுதுமலை சிவஸ்ரீ ச. பொன்னுஸ்வாமிக் குருக்கள் அவர்கள்.)

தீதிலெலு மிச்சங்காய் சேர்முத்தோ டத்தையுமுன்
வாகபஞ் சூலையையும் மாகொடிய—சாதியெனுஞ்
சர்த்திகுன் மத்தையுமுள் தக்கமருந் திட்டதையும்
பித்தவெப்பை யுந்தணிக்கும் பேசு.

தந்தம்விழுப் பண்ணுஞ் சலவைதனைக் கொடுக்கும்
வெந்துய்க விந்துவை விழச்செய்யும்—அந்த
எலுமிச்சங் காய்போல் இருக்குங் கொடிய
கலுமிச்சங்காய்க் குணத்தைக் காண்.

தாகங் குதகநோய் தாழாச் சிலீபதநோய்
வேகங்கொள் உன்மத்தம் வீறுபித்தம்—மாகண்ணோய்
கன்னநோய் வாந்தியும்போங் கட்டுவா தித்தொழிலில்
மன்னெலுமிச் சங்கனியை வாழ்த்து.

விடியற்காலையில் தேநீர் கோப்பி பானிப்பதிலும் பார்க்கக் கொத்தமல்லியை அவித்துத் தண்ணீருடன் இஞ்சிச்சாறும் எலுமிச்சம்புளியும் சர்க்கரையும் சேர்த்து உபயோகித்தால் அசீரணம் முதலியவைகளை நீக்கி உற்சாகத்தைக் கொடுக்கும், புளியைத் தண்ணீருடன் கலந்து உட்கொண்டால் பித்தக்கோளாற்றை நீக்கும் தந்தசுத்தி செய்யும்போது தண்ணீருடன் புளியையுஞ்சேர்த்து வாய் கொப்பளித்தால் பல்லெயிறு பலமடையும் துர்நாற்றம் நீங்கும். அதைக்கொண்டு தொண்டையில் படும்படி கொப்பளித்தால் தொண்டைப்புண் நிவர்த்தியாம். நரம்புப் பலவீனத்தால் உண்டான தலைவலிக்குச் சூடான தேயிலைக் கஷாயத்தில் இரண்டு பழத்துண்டுகளைப் போட்டுக் குடிக்க வலிநிற்கும். இரத்தக்காயத்திற்கு எலுமிச்சம்புளியை நனைத்துக் கட்டினால் இரத்தம் தடைப்படும் எழுதும் மைக்கறை, பழக்கறை, துரு முதலிய கறைகளுக்கு உப்பையும் எலுமிச்சம் புளியையுங் கலந்து தேய்த்தால் அவைகள் நீங்கும். காய்ந்த எலுமிச்சம் பழத்தோல்களை தணலில் போட்டுப் புகைத்தால் அறைகளிலுள்ள கெட்ட நாற்றங்கள் நீங்கும். சோறு கொதிக்கும்போது கொஞ்சப் புளியைச்சேர்த்தால் சோறு வெண்மையும் உருசியுமாக இருக்கும். விஷம் பட்ட இடத்தினெரிச்சலுக்குப் புளியை மாத்திரந்தடவ எரிச்சல் நீங்கும் இன்னும் அநேகமுள.

'இந்துசாதனம்'



## தன்சரிதம் உணர்த்தும் தம்பிரான் றோழர்

அல்லது

# ஏழாந் திருமுறையின் இனியபகுதி.

(ஆண்டு-௮: திங்கள்-௩: 19-ஆம் பக்கத் தொடர்பு.)

[நாகபட்டினம், நாஷனல் ஹைஸ்கூல், தமிழாசிரியர், வித்துவான் திரு. ச. தண்டபாணிதேசிகர் அவர்கள்.]

புராண வரலாறுகளில் முப்புரம் எரித்த வரலாறு, பெரும்பாலும் வில்லை வளைத்து அம்பு எய்தே தொளைத்ததாகவும், அதில் அசுரர் மூவரும்பிழைத்ததாகவும், பலவிடத்தும் குறிக்கப்பெறுகின்றன. முப்புரங்களைச் சிரித்து எரித்ததற்குப் பெரும்பான்மையான ஆதாரமில்லாமை கருதற்பாலது. அருச்சுனனோடு வேடனாகி விளையாட்டுச் சண்டை விளைத்ததும், இராவணனை விரலாலூன்றி யடர்த்ததும் அடிக்கடி குறிக்கப்பெறுகின்றன. அந்தந்த தலங்களுக்கேற்றபுராணகதைகளும் அமைந்துள்ளன. திருவானைக்காவில், சோழன் காவிரியில் நீராடும்போது முத்தாரம் நழுவி விட, 'இறைவனுக்கு ஆகுக' என அன்பு கொண்டளித்தலும், 'திருமஞ்சனக் குடத்தின் வழியாகச் சென்று இறைவன் திருக்கழுத்தில் விளங்கிற்று' என்னும் தலபுராண வரலாறும், 'திருமால் ஆயிர மலரால் அருச்சித்துச் சக்கரம் பெற்றார்' என்ற திருவீழிமிழலைத் தலவரலாறும், 'பரசுராமன் முந்நூற்றறுபது வேலிநிலத்தை முந்நூறு வேதியர்க்கு அளித்து சிவபெருமானுக்கு நின்றியூரை யளித்து பாததரிசனம் பெற்றார்' என்னும் நின்றியூர்த் தலவரலாறும் குறிக்கப்பெறுகின்றன.

"சொல்லரும் புகழான் தொண்டைமான் களிற்றைச் சூழ் கொடி முல்லையாற் கட்டிட்டு, எல்லையி லின்பம் அவன்பெற வெளிப்பட் டருளிய இறைவன்" என்ற பகுதியால், 'கருணைக் கடலாகிய கண்ணூர்த் தொண்டைமான் என்பவன் புழற்கோட்டத்தரசாண்ட சிற்றரசர்களாகிய குறும்பர்களை யடக்கப் படையெடுத்து ஒருகாட்டின் வழியாகச் சென்றான். அப்போது நடுக்காட்டில் ஒரு முல்லைக்கொடி அவன் ஏறிச்சென்ற பட்டத்து யானையைத் தடுத்தது. சினந்த அரசன் தனது உடைவாளால் அக்கொடியை வெட்ட, அவ்வெட்டு அடியிலிருந்த சிவலிங்கப் பெருமான்மீது விழ இரத்தம் பெருகிற்று. அரசன் அஞ்சி வேண்டினான். இறைவன் வெளிப்போந்து அருள்செய்தனர்.' என்ற வடதிரு முல்லைவாயிற் செய்தி வலியுறுக்கப்பெறுகின்றது.

யானையை யுரித்துப் போர்த்திய வீரத்தைப்பற்றிக் கூறும் இடங்களில் எல்லாம் "கைம்மாவின் உரிபோர்த்து உமைவெருவக்

**கண்டானை"** "மங்கைநங்கையஞ்ச யானையீருரி போர்ப்பரோ" எனப் பலவிடங்களில் உமையம்மையார் வெருவ உரித்துப் போர்த்தினர் எனக் கூறப்பெறுகின்றது.

வீரத்திற்கு வீமனையும் அருச்சுனனையும், கொடைக்கு மாரி வண்கைப் பாரியையும் உவமை கொடுத்து அவர்களியல்பு விளக்கப் பெறுகின்றது.

**இயற்கை எழில்:**—எங்கெங்கு மனத்தைக் கவரும் மாண்பு விளங்குகின்றதோ அங்கு எல்லாம் எழில் உண்டு. அவ்வெழில் இயற்கையும் செயற்கையும் என இருவகைத்து. அவற்றுள், இயற்கையே சிறந்தது என்பதும், அதைப் படம் எடுத்துக் காட்டினாற் போல உளங்கொளச் செய்வதில் எம் புலவர்பெருமக்கள் இணையற்றவர்கள் என்பதும் உலகறிந்த உண்மையாகும். அதிலும், பலவகை இயற்கையழகோடு ஒளிரும் பற்பல தலங்களை நேரிற் கண்டுணர்ந்த நாயன்மார்கள் நாவாற் கடைந்தெடுக்கப்பெற்ற இயற்கை யமுதம் மிக இனிப்பதாகும். திருப்புனவாயில் தேவாரத்துப் "போத்தி லாந்தைகள் பாட்டருப் புனவாயிலே" என்பது இன்றும் அந்நிகழ்ச்சி உளதாதலை நோக்க விளங்குகின்றது. "வங்க மலிகின்ற கடன்மா தோட்டம்" "தெங்கம் பொழில்சூழ் திருக்கே தீச்சரம்" என்பன இலங்கையின் நிலவியற்கையை விளக்குவன. "களங்களார்தரு கழனி யளிதரு" என்ற பாசுரத்தில் களங்களும், அவற்றின் பக்கத்தில் நீர் நிறைந்த வயல்களும், அதில் தேனையுண்டு களித்த வண்டுகளின் இன்னொலியும், குளங்களும், அதனைச் சுற்றியுள்ள ஆலமரங்களும், அவற்றின் கொம்பரிலிருந்து குயிலாலும் காட்சியும் செவ்வியுறத் தெரிக்கப்பெறுகின்றன. எல்லாவற்றினும் சிறந்ததாகத் திருக்கலயநல்லூர்ப் பதிகமானது இயற்கையழகை விளக்குவதற்கென்றே பாடப்பெற்றது போலும். ஒவ்வொரு பாசுரத்தின் பின்னிரண்டடிகளும் இயற்கையை நன்கு விளக்குவன.

"அரும்பருகே சுரும்பருவ அறுபதம் பண்பாட" என்றபாசுரத்தால், "அரும்புகளின் பக்கலில் சுரும்பு என்னும் ஒருசாதி வண்டு ஒலிக்க ஏனைவண்டுகள் பண்பாட மயில்கள் நடமாடுகின்ற பொழில்கள் உள்ளன. அப்பொழிலினருகில் கரும்புநிறைந்த வயல்கள் உள்ளன. அவற்றின் அருகில் கருங்குவளைகள் மலர்ந்து கவின்செய்கின்றன." என மாதரார் நடமிடும் மணியரங்கென விளங்கும் பொழிலும், அதன் பக்கல் பல்வளங் கெழுமிய நல்ல வயல்களும் பிணைந்து அழகு செய்யும் காட்சி அணியுறுத்தப் பெறுகின்றது. இவ்வாறே பேரறிவைப் பெருக்கும் வேதவொலியும், பிள்ளைகளின் விளையாட்டொலியும், பேரிழுழுவொலியும் கலந்துள்ளன என்றும், அங்குள்ள குளங்களில் எருமைகள் விழுந்து உழக்குவதால் மீன்கள் ஒருங்கு சேர்ந்து வெருவி ஓடுகின்றன. அதனால், தாமரைகளில் மொய்த்



துள்ளவண்டுகள் எழுந்து ஒலிக்கின்றன என்றும் இயற்கைகள் பலவாறு விளக்கப்பெறுகின்றன.

இங்ஙனம் நிலவியற்கை விளக்கப்பெறுதலேயன்றி மக்களியற்கையையும், விலங்கியற்கையையும் விளக்கிச் செல்லுகின்றது. திருமுருகன்பூண்டித் தேவாரத்து வேடர்கள் வழிப்போவாரை வில்லைக் காட்டிப் பயமுறுத்திக் கல்லாலடித்தும், மோதியும் பறிக்கிறார்கள் என வேடர்களியற்கை விளக்கவந்தபோது "பசுக்களே கொன்று தின்று பாவிகள் பாவமொன் றறியார், உசிர்க்கொலை பலநேர்ந்து நாடொறும் கூறை கொள்ளு மிடம்" என்ற பாசுரத்து அவர்கள் அநேக உயிர்களைக் கொல்லுகின்றார்கள் என்றார். இவர்களுக்கு எவ்வாறு வருத்தமின்றியும் கருணையின்றியும் கொல்லுந் தன்மை வந்தது எனின், அவர்கள் நாடோறும் பசுக்களைக் கொன்று தின்று வந்த பழக்கத்தால் சிறிதும் பதைப்பும் இரக்கமுமின்றி உசிர்க்கொலைபுரிகின்றனர் எனக் காரணங்கூறுவது கருதற்பாலது. "நின்றுண் சமணரும் இருந்துண் தேரரும்" எனச் சமணர்களியல்பும் குறிக்கப் பெறுகின்றது.

"ஆனைக்குல மிரிந்தோடித்தன் பிடிசூழலிற் றிரியத்
தானப்பிடி செவிதாழ்த்திட அதற்குமிக இரங்கி
மானக்குற அடல்வேடர்கள் இலையாற்கலை கோலித்
தேனைப்பிழிந் தினிதூட்டிடும் சீபர்ப்பத மலையே."

என்னும் பாசுரத்தில் குறவர்களுடைய மானமும் கருணையும் விளக்கப்பெறுகின்றன. யானைக் கூட்டம் வேடர்களுக்குப் பயந்து ஓடித் தமது பெண்யானைகளோடு திரிகின்றது. பயந்து வந்த அதனைக்கண்ட பெண்யானைகளும் அச்சத்தால் செவியைத் தாழ்க்கின்றன. அவற்றின் அச்ச மிகுதியைக்கண்ட கொலை வேடர்களும் அஞ்சி யவற்றின்மேல் அம்பு எய்தல் அறமும் மானமும் அன்றாகலின், மானத்திற்கு அஞ்சி கருணைகூர்ந்து இலைக்கல்லையில் தேனைப் பிழிந்து ஊட்டுகின்றனர் என்ற செய்தி கூறப்பெறுகின்றது. இதனால் 'யானை அச்சமேலிட்டால் செவியை உடலோடு ஒட்டத் தாழ்க்கும்' என்ற விலங்கியற்கையும், 'வேடர்கள் கொடியராயினும் மானத்திற்கு அடங்குபவர்கள்' என்ற நீதியும் விளங்குகின்றன.

மற்றும், மரையினங்களும் மான்களும் மயிற்குலங்களும் வயிறார மேய்ந்து சுனைத்தண்ணீரைப் பருகிப் பூமாமரங்களில் உரிஞ்சித் தினவுபோக்கிக்கொண்டு மாமர நீழலிற் கவலையற்றுத் தூங்குகின்றன. மலைச்சாரல் பொழிற்சாரல் இவற்றில் தங்கன் றல்லாத புறமான யானையினங்கள் தன் தாயென்ற மலைப்பால் மடியிலிடித்துப் பாலுண்ண, பிடியானை கலங்கித் தன்னைக் காக்கவேண்டித் தனது களிற்றை யழைக்கப் பிளிறிற்று. அதனைக் கேட்ட ஆண்யானையும் கலங்கித் தன் பிடியைத் தேடுகின்றது என யானைக் கன்றுகள்

மிகுந்த இளமையால் அறியாது பால் குடித்தலும், பிடியின் பிளிறலைக்கேட்டுக் களிறு தேடும் பண்பும் அழகுபெறக் கூறப்பெறுகின்றன. காலவியற்கையும் தாவரஇயற்கையும் சில கூறப்பெற்றுள்ளன.

சாத்திரக் கருத்துக்கள்:—“இழைக்கும் எழுத்துக்கு உயிரே ஒத்தியால் இலையே ஒத்தியால் உளையே ஒத்தியால், குழைக்கும் பயிர்க்கு ஓர் புயலே யொத்தியால்” என்ற பாசுரத்தால் எழுத்துக்களுள் உயிர் எழுத்தானது எவ்வாறு எல்லாமெய்களையும் இயக்கி அவற்றுட் கலந்து மாத்திரைநோக்குங்கால் தன்மாத்திரையே மாத்திரையாய் மெய்மாத்திரை யற நிற்கின்றதோ, அவ்வாறு இறைவனும் ஆன்மாக்களிடம் கலந்து இயக்கி பதிபோதமிகுவித்து நிற்பர் என்றும், இல்லையென்போர்க்கு இல்லாத பொருளையொத்தும், உளனென்போர்க்கு உள்ள பொருளையொத்தும், தளிர்க்கின்ற பயிரை மேலும் தளிர்க்கச் செய்யும் மேகம்போல, அன்புத்தளிரீனும் ஆன்மாக்களாகிய பயிரை நன்குவளர்க்கும் ஞானப்புயலாய் உளனென்றும் இறைவனியல்பு விளக்கப்பெற்றுளது. மற்றும், பூவினுள் வாசம்போன்றும், பண்ணிடைத் தமிழ்போன்றும் மெய்ப்போதவின்பமா வண்ணங்கலந்து அன்பர்களுடைய துன்பம்போக்கி இன்பம் ஆக்கும் இனிமையும் பலவிடங்களிற் குறிக்கப்பெற்றுள்ளன. ‘தமிழோடிசை கேட்கும் இச்சையாற் காசு நித்தல் நல்கினீர்’ எனவும், ‘தண்டமிழ்நூற் புலவாணர்க்கோர் அம்மானே’ எனவும் சிவபெருமானுடைய செந்தமிழ்ப்பற்று விளக்கப்பெறுதல் காண்க.

“நேற்று நடந்தார் உடுத்தார் நரைத்தார் இன்றோ இறந்தார் என வெறுஞ் சொல்லாய்க் கழிகின்றது இவ்வுலக வாழ்வு. மக்களுடல்பெற்ற இளமையோ ஆற்றங்கரைபோல நாள் அரித்தூச் செல்கின்றது. இவ்வுடலோ நெல்லின்வால் குத்தினாலும் வருந்துமியல்பிற்று. ஆகையால், மாதர்கள் வயப்பட்டு அளிந்த பலாப்பழம்போல் அழுகி ஒழுகிக் கெடாததற்கு முன் பொறிகளை வென்று உன் திருவடியடையும் உபாயஞ் சொல்” எனவேண்டிக் கொள்ளுமுகத்தால் யாக்கைநிலையாமையும், இளமைநிலையாமையும் விளக்கிப் பசு இயல்பும் இடங்கடோறும் விளக்கப்பெறுகின்றது.

“பிறப்புண்டாயின் இறப்பும் உண்டு. ஆதலால், யானைமீதேறித் தானைமன்னர் புடைசூழ வரினும் செத்த பிறகு உம்முடன் வருவார் யாருமில்லை என்பதை மனக் கொள்ளுங்கள். மயக்குங் கண்ணார் மாயவலையுட்பட்டுழலாது இந்நாற்ற உடல் சென்று தேய்ந்து அழிவதற்கு முன் இறைவனை அடைவோம். மனக் குற்றங்களைப் போக்கி அன்பு ஒன்றைமட்டும் உட்புகுத்தி எதிர்கொள்பாடியையடைவோம்.” எனக்கூறும் எதிர்கொள்பாடித் தேவாரப்பகுதிகள் கருங்கல் மனமும் கரைந்துகச் செய்வனவாம். இப்பகுதியும், ‘இறைகளோ டிசைந்த இன்பம்,’ என்னும் திருவாரூர்ப் பாசுரங்



களும் சிவஞானப் பயிர் செழித்தோங்க அன்புநீர் பாய்ச்சும் அரிய ஊற்றுக்களாம்.

துறை தழுவிய பாசுரங்கள்:—இத் திருமுறையின்கண் அகப்பொருளமைதி பெற்ற பாசுரங்கள் பல வுள்ளன. அவை உள்ளுறையமைந்து நயமுடன் விளங்குகின்றன.

“சக்கரவாகத் திளம் பேடைகாள் சேவல்காள்
அக்கிரமங்கள் செயும் அடிகளா ரூரர்க்கு
வக்கிரம் இல்லாமையும் வளைகள் நில்லாமையும்
உக்கிர மில்லாமையும் உணர்த்த வல்லீர்களே”

இஃது ஆரூர்ப் பெருமான் விஷயமாகக் கொண்ட காதல் ஆற்றமுடியாமையை அவரிடம் தூதாகச்சென்று அறிவித்து வரும்படித் தலைவியானவள் சக்கரவாகத்தை ஏவியது. சக்கரவாகங்களே! பொல்லாவினைபுரிந்த என்போன்ற மெல்லியலார்களைக் காதல் வயப்படுத்தி அக்கிரமம் பண்ணுகின்ற ஆரூரர் பக்கல் சென்று உம்மை விரும்பிய தலைவி கணந்தோறும் இளைப்பதால் கைகளில் வளைகள் நில்லா என்பதையும், அடியேனிடம் பிணைக்கும் கொடுமையும் இல்லை என்பதும் உணர்த்தவல்லீர்களே என்றாள். இதில், ‘சக்கரவாகத்திளம்பேடைகாள்! சக்கரவாகத்திளம் சேவல்காள்! என்றது ஊன்றியாராயத்தக்கது. பிரிவினால் உண்டாகும் துன்பத்தை இரவினும், புணர்ப்பினால் உண்டாகும் இன்பத்தைப் பகலினும் நீங்களும் உணர்வீர்கள். அதினும், நீங்கள் இளம்பேடையும் இளஞ்சேவலுமாக இருப்பதால் பிரிவிற்றுன்பத்தைப் பெரிதும் உணர்வீர்கள். ஆதலின், என் துன்பத்திற்குத் தூது செல்ல நீங்கள் மறுக்க மாட்டீர்கள்.’ என்றாள். பெண்ணாகிய நான் படும் பாட்டைப் பெடை நன்கு அறியுமாதலால், அதனைமட்டும் வேண்டுவேன். அது சென்றுசொல்லின், பெண்களுக்குப் பரிதல் பெண்கள் வழக்கம் எனப் பெருமான் எண்ணவும் கூடும். ஆதலின், ‘சேவல்காள்!’ என அதனையும் உடன்விளித்து வேண்டிய அழகு உணரத்தக்கது. இவ்வாறே ஒற்றியூர்ப்பதிகத்தும் ‘பந்தாடியும் கிளியொடு பேசியுங் காலங் கழிக்கின்ற இளைய என் தலைவியின் சிந்தை கவர் கள்வராகிய சிவபெருமான் எழுந்தருளிய ஊர் ஒற்றியூரோ.’ என ஊர்கேட்கும் பாசுரமும் இனியவற்றுள் ஒன்று.

சீ பருப்பதப் பதிகத்து,

“அப்போதுவந் துண்டீர்க்ளுக் கழையாதுமுன் னிருந்தேன்
எப்போதும்வந் துண்டாலெமை யெமர்கள் சுழியாரோ
இப்போதுமக் கிதுவேதொழில் என்றோடியக் கிளியைச்
செப்பேந்திள முலையாளெறி சீபர்ப்பத மலையே”

என்னும் பாசுரம் பன்னெடுநாளாகக் களவின்கண் வந்து போகின்ற தலைவனைத் தோழி, வரைவொடு வருதல்வேண்டும் என வருமேதங்கூறி வற்புறுத்தியிருக்கவும், மீட்டும் வந்தனனாக, கிளிகளை நோக்கிக் கூறுவதுபோலத் தோழி தலைமகனை விலக்கியது. "ஏ! கிளிகளே! அப்போது பலமுறை வந்து கதிர் உண்டீர்கள். அப்போது யானும் அழையாமல் சும்மா இருந்துவிட்டேன். அங்ஙனமாகத் தரமறிந்து தானே ஒதுங்காமல் எப்போதும் வந்து எங்கள் தினைக்கதிரை யுண்டால் எங்கள் தந்தைமுதலியோர் சினவார்களா? மீட்டும்மீட்டும் நீங்கள் வருவதால் இப்போது உங்களுக்கு ஏற்ற தொழில் இதுதான்.' என்று தோழி கிளியைக் கவணால் எறிந்தாள்" என்பது இதன்பொருள். இதில், 'தலைவனே! நீர் பல்கால் எந் தலைவியின் நலநுகரவும், யான் தலைவியை யழையாது சும்மா இருந்தேன். எப்போதும் நீர் இவ்வாறு களவாக வந்து நலனுகர்ந்து நடந்தால் என்னையன்மார் கோபியார்களா?' என்ற உள்ளுறை வலிந்துகோடலன்றிச் செம்பாகமாக உரைக்கிடத்தல் உள்ளத்திற்குப் பெருவிருந்தாகும்.

நயம் உடைய பகுதி:—இறைவனைக், "கற்ற கல்வியினும் இனியான்" என்றதும், இறைவன் என்றும் இல்லாதவரா? இருந்து இல்லாதவரா? என விளையாட்டாக வினவுவதாகவரும் "இன்றியே இலராவரோ அன்றி உடையராய் இலராவரோ" என்னும் பகுதியும் மிக நயமுடையன. மற்றும், 'தீமைக்குத் தண்டிப்பவன் தீமை புரியாதவனாய் இருத்தல் வேண்டும். அங்ஙனமாகத் தேவரீர் முன்னரே மலைமகளை மணந்தீர். அதனை யெண்ணாமல் ஆயிர முகமுடைய கங்கையாளைப் பின் மணந்தீர். ஆண்டான் செய்யும் தீமைகளை அடியான் சொல்லலாமோ? ஆதலால், மனமே நீ ஏன் வாடுகின்றாய்? பண்டைவல்வினைக்குப்பயந்துபிணங்கினால் என்ன ஆகப் போகிறது.?' எனக்கூறும் 'கூடினாய் மலைமங்கையை' என்னும் பாசுரம் சிறந்தனவற்றுள் சிறந்ததாம்.

நகைச்சுவை:—நட்புரிமை பற்றிப்பேசும் நாவலாரூரர் பாட்டில் நகைச்சுவை மலிதல் வியப்பன்று. 'உடுகூறையுஞ் சோறுந் தந்தாளகில்லீர், ஆளாளியவே கற்றீர்' எனத் திருப்பரங்குன்றத் தேவாரத்துக் கூறியதும், 'கங்கையாளோ வாய்திறவாள், கணபதியோ வயிறுதாரி, குமரனோ இளையன், தம் மனைவியே வீணாக ஆளுந்தபத்தினர் அல்லர், உம் குடும்பமே ஆளும் தரத்தின தன்றாதலால் ஆட்படமாட்டோம்.' எனக் கூறியதும் நகைச்சுவை பயப்பனவாம். சமணர்களியற்கை கூறும்போது 'ஏமண ஞாண ஞண ஞாண ஞோணம்என்று ஓதியாரையும் நாணிலா அமணர்' என வரும் பகுதியும், உலகமாந்தரியற்கையாக 'உழக்கே உண்டு படைத்து ஈட்டிவைப்பார்களும் சிலர்' என இழித்துக்கூறும் பகுதியும் அத்தகையனவே.



'கழித்தலைப்பட்ட நாயது போல' 'மகத்திற்புக்கதோர் சனியேனக்காணாய்' 'கன்றுமுட்டி 'புண்ணைச் சுரந்த காலியவை போல' என்ற உவமங்கள் பொருளாழம் பெற்றனவாம்.

இத்திருமுறையின்கண், 'முனிபவர் தம்மை முனிதல்வேண்டேம். சண்டிக்கு ஏற்ற மிண்டனாய் இருத்தல் வேண்டும்' என்ற நீதிகளும், 'பேயோடு பழகினாலும் பிரிவதரிது' 'பஞ்சியிடப் புட்டில் சீறுமா' 'பொன்மலையைச் சேர்ந்த காக்கையும் பொன்னாம்' 'முயலின் வலையில் யானைபடுமா' 'கழுதை குங்குமஞ் சுமந்தாற்போல' 'புழுக்கை(சாணி)வாரியும் பால்பெறுவதுபோல' என்ற பழமொழிகளும் ஆங்காங்கே அமைந்தொளிர்கின்றன.

இதில், 'மோழைமை, முட்டை, மோறாந்து, பனுவி, பண்டம், போத்தடையான்' என்றசொற்களும், உன்னையென்ற பொருளில் 'நுனை' யென்றும், 'பிழைத்தனகள்' என அகரவீற்றுப்பலவறிசொல்லின்மேல் கள் விகுதிபெற்றும், 'கரவன்' என்றசொல்லும் வந்திருத்தல் மிக அருவழக்கினவாம். மற்றும், ஆண்வண்டிற்குக் 'காளைவண்டு' என்றும், கவண் வீசுதலுக்கு 'கவணொலித்தல்' என்றும் வரும் சொற்றொடர்களும், 'கருக்குவாய்ப்பெண்ணை' என்னும் தொடரும் அத்தகையன. ஆப்தம், உக்கிரம், வக்கிரம், ஆபற்காலம், நிஷ்கண்டகம் முதலான முழுவடசொற்கள் பலவும் கலந்திருக்கின்றன.

'வன்னாகநாண் வரைவில் அங்கிகணை அரிபகழி' என்ற பகுதியால் கணைக்கும் பகழிக்கும் பெரிதும் வேறுபாடு உண்டென்பது குறிப்பிக்கப்பெறுகின்றது. கணை என்பது திரண்ட கூரிய பகழியின் முகத்திற் பூட்டிய அலகு. பகழி - அம்பு.

நம்பியாரூரரைப்பற்றிப் பிறநூல்களில் வழங்கும் சரிதங்கள்:— பேரூரில் எழுந்தருளியுள்ள பட்டிப்பெருமான், சுந்தரர் அவிநாசிக்குச் சென்றுவரும்போது, 'பாடிக்கொண்டு வருவாரே கொடுக்கப் பொருளில்லையே' என்று பயந்து பள்ளவடிவுகொண்டு வயலுக்குப் போனார். நந்தியைப் பார்த்துச் சுந்தரன் தேடினால் நான்சென்றவிடத்தைத் தெரிவியாதே என்றும் போயினர். சுந்தரர் வந்து நந்தியெம்பிரானை வினாவ, இறைவன்கட்டளையை மீறுவதற்கு அஞ்சியும், அடியார்க்குப் பொய் சொல்லலாகாமைக்குப் பயந்தும் கண்ணால் காட்டினார். சுந்தரர் சென்று கண்டு வணங்கினர்.' என்ற கதை கொங்குமண்டல சதகத்தும் பேரூர்ப்புராணத்தும் குறிக்கப்பெறுகின்றது.

அவ்வாறே, 'சுந்தரர் அவிநாசியினின்றும் புறப்பட்டுச் செல்லும்போது வழிதெரியாது திகைக்க, இறைவனும்இறைவியும் வேடவடிவுகொண்டு வழிகாட்டிச் சென்று தாடியலூரை அடைவித்து

மறைந்தனர். ஆடியனூர் ஆலயத்துட் சென்று இறைவனைப் பணிந்தார். இறைவன் காலமறிந்து ஊட்ட வல்லவர் ஆதலின், கணநாதரைக்கொண்டு பலவகை யுணவுடன் காட்டு முருங்கையிலைக் காய்கறியுடன் விருந்து ஊட்டினர்.' என்ற வரலாறும் கொங்குமண்டல சதகத்துக் காணப்படுகின்றது. இதனை நமது நாவலாரூரர், வாழ்கொளிபுத்தூர்ப் பதிகத்து 'செங்கண் வேடனாய் என்னொடும் வந்து மருவினன்தனை' எனக் குறிப்பித்தருளுதல் காண்க.

ஒவ்வொரு சருக்கத்திறுதிக்கண்ணும் வன்றொண்டர்க்கு வாழ்த்துக் கூறும் சேக்கிழார்பெருமான், வார்கொண்டசருக்கத் திறுதிக்கண்,

"........சடையார் தூது தருந்திரு நாள்
கூனுங் குருடுந் தீர்த்தேவல் கொள்வார் மலர்ப்பாதம்
யானும் பரவித் தீர்க்கின்றேன் ஏழு பிறப்பின் முடங்குகூன்."

என வாழ்த்துக்கூறினார். அதிற் சங்கரர் கூன்தீர்த்த வரலாறு ஒன்றும், குருடுதீர்த்த வரலாறு ஒன்றும் குறிக்கப்பெறுகின்றது.

"அறுபதும் பத்தும் எட்டும் ஆறினோ டஞ்சு நான்கும்
துறுபறித் தனைய நோக்கி சொல்லிற்றேன் றுகச் சொல்லார்".

என்ற பகுதி தத்துவங்கள் தொண்ணூற்றாறினை விளக்குவதாகச் சிலர் கூறுகின்றனர். 'சொல்லிற் றேன்றுகச் சொல்லார்' எனப் பிறர் மதமாயுரைத்து விலக்குதலானும், எண்களைக் கூட்டி நோக்கின் தொண்ணூற்றுமூன்றே வருதலானும், இக்கருத்தை இயைக்குமுறைதான் என்ன? அல்லது வேறு கருத்துண்டா? என்பதும் ஆராயத்தக்கது. 'பேயுருவ மூன்றுமுறமலைமே லிருந்தானை' எனத் திருவதிகைத் தேவாரத்து ஒரு செய்தி குறிக்கப்பெறுகின்றது. அதன் விளக்கம் ஒன்றும் அறியமுடியவில்லை. ஆதலால், 'செந்தமிழ்ச் சைவப் பெரியார்கள் நமது 'சிவநேசன்' வாயிலாக விளக்குவார்களாயின் தமியேனைப் போன்ற தமிழ்மாணவர்களுக்கு உணர்த்திய உபகாரமாகும்.' என்பதை விண்ணப்பித்துக் கொள்ளுகின்றேன். இவ்வாறே, திருநாவுக்கரசர் திருமுறையையும் திருவருள் துணைக்கொண்டு ஆராய்ந்து எழுதலாம் என்று எண்ணியுள்ளேன். தோன்றாத்துணை யையர் இணையடி துணைபுரிவ தாகுக.

அரவக லல்கு லார்பா லாசைநீத் தவர்க்கே வீடு
தருவமென் றளவில் வேதஞ் சாற்றிய தலைவன் றன்னைப்
பரவைதன் புலவி தீர்ப்பான் சுழுதுகண் படுக்கும் பானு
ளிரவினிற் றூது கொண்டோ னிணையடி முடிமேல் வைப்பாம்.

---

உ

# தாயுமானவர் தத்துவ விளக்கம்.

(தோமங்கலம் ஆசிரியர் திரு. அ. வரதநஞ்சைய பிள்ளை அவர்கள்.)

புருடார்த்தங்கள் நான்கினுள்ளும் மிகச் சிறந்ததாகிய வீடுபேற்று நெறியை விளக்கற்கெழுந்த பல சமயநூற்களையும் காய்தல் உவத்தல் அகற்றிப் பன்முறை ஒழுங்காகக் கற்று, அவற்றுள் ஒன்றற்கொன்று ஒற்றுமை வேற்றுமை காட்டும் பகுதிகளை நுனித்துணர்ந்து ஆய்ந்து, முன்பின் முரணுதவாறு மெய்ப்பொருளை இயற்கை நெறியோடு பொருந்தக் கூறும் சமயநூல் யாது? என ஒன்றைத் தேர்ந்து காணும் செம்புலச் செல்வர்கள், சைவசித்தாந்த நூலொன்றனையே உவந்து ஏற்றுக்கொள்வார்கள். இவ் வுண்மை அத்தகைக் கூர்த்த மதிநுட்ப முடையார்க்குப் புலப்படுவதன்றித் தாம் கண்டதே சிறந்ததெனத் தருக்கிக் கூறும் ஏனைச் சமயவாதிகட்குப் புலனாவ தொன்றன்றாம். அறிந்தோர் கூறினும் அவற்றை மேற்கொள்ளாது அசதியாடுவாரும் பலரே. இத்தகைய சைவசித்தாந்த நுண்பொருட்களை அநுபவவழிக் கண்டு 'யான் பெற்றபேறு பெறுக இவ்வையகம்.' எனக் கருணைகூர்ந்து பிற்காலத்து நூல் செய்த பெரியோருள் நமது தாயுமானவரும் ஒருவர். சிறந்த ஞானப் பேறும், தமதநுபவத்தை யுரைத்தற் கேற்ற இலக்கிய இலக்கணத் தேர்ச்சியும் பெற்ற இம்முனிவர், தமது பெயரால் வெளியிட்ட நூலில் (தாயுமானவர்பாடல்) வேறு எந்நூலினும் காண்டற்கரிய வகையில் தத்துவங்களை மிகவெளிமையாக விளக்கிச் செல்லும் பகுதிகளை யாம் அறிந்தவாறு வெளியிடத் துணிந்தேம். 'பிழையுளாதேற் பொறுப்பர் பெரியோர். அஃதவர்தம் பேரருளின் இயற்கை' என்றுதேற்றி எம்மை இங்ஙனம்தூண்டிய மனவெழுச்சியே இதற்குப் பொருட்டாயிற்று.

தாயுமானவர்பாடல், சச்சிதானந்தசிவம், பத்தாவது செய்யுள்.

வேதாவை யிவ்வணம் விதித்ததே தெனினுன்
  வினைப்பகுதி யென்பனந்த
வினைபேச வறியாது நிற்கவிவை மனதால்
  விளைந்ததான் மனதை நாடிற்
போதமே நிற்குமப் போதத்தை நாடிலோ
  போதமு நிலைவி ளக்கம்
பொய்யன்று தெய்வமறை யாவுமே நீயென்று
  போக்குவர வறநி கழ்த்தும்
ஆதார வாதேய முழுதுநீ யாதலா
  லகிலமீ தென்னை யாட்டி.

*யாடல்கண் டவனுநீ யாடுகின் றவனுநீ*
*யருளுநீ மௌன ஞான*
*தாதாவு நீபெற்ற தாய்தந்தை தாமுநீ*
*தமருநீ யாவு நீகாண்*
*சர்வபரி பூரண வகண்டதத் துவமான*
*சச்சிதா னந்த சிவமே!*

இச் செய்யுளிற் கூறும் சித்தாந்த இரகசியங்களை ஊன்றிச் சிந்திப்போம். "ஏ! படைப்புக் கர்த்தாவாகிய பிரமனே! ஐம்புலக் கள்வர் புறத்திலும், காமாதி ஆறுபகைவர் அகத்திலும் அலைக்க அலைப்புண்டு, கணப்பொழுதேனும் ஓர் நிலையினில்லாது காற்றாடியும் பம்பரமும் பிற்படச் சுழலும் மனத்தால் விளையும் பற்றுக்கள் காரணமாக வரும் பலகோடி இன்னல்களை அடைந்து, புடை நாற்றம் வீசும் இப் பொய்யுடலில் ஆன்மாவாகிய யான் புகுந்து, உய்யும் நெறியறியாது பிறவிப்பெருங்கடலுள் மூழ்கி அலைந்துகெடுமாறு என்னை இவ்வுலகில் நீ ஏன் படைத்தனை? நினக்கு யான் இயற்றிய தீங்கு யாதோ? நின்னையே இன்னதென்றறியாத பேதையேன் நினக்குத் தீங்கிழைப்பதுதான் யாங்ஙனம்? என்னைப் பெருந்துயருறுத்தி நீ பெறும் பேறுதான் யாதுளது? படைக்கப்பட்ட எனக்கும் படைத்த நினக்கும் பயனற்ற இத்தொழிலில் நீ தலையிட்டதென்னையோ?" என மனக்கொதிப்புடன் விதியவனை வினவுவேனால், அவன் கூறும் மறுமொழி யாது? "ஓ! பேதாய்! என்மேல் அடாப்பழி சுமத்தாதே. நீ சென்ற பிறவிகளிற் செய்த நல்வினை தீவினைகட்கீடாக உரிய இன்ப துன்பங்களைத் துய்ப்பதற்கென இறைவனாணையின்படி யான் நினக்குடல் தருகின்றேன். இப்போது நின் துன்பத்திற்குக் காரணமானவர்கள் யாவர்? என நீயே தேர்ந்தறிவாயாக. இனி நின் சீற்றம் நின் வினைகள்மேற் செல்வனவாக" என்று கூறுவன். யான் நாணி. என்வினைகளை நோக்கி, "ஓ! பாழ்த்த வினைகளே! நீவிர் என்பாற்றோன்றி என்னையே கெடுப்பது பெரும்பாவமன்றோ? நுங்கட்கென்னே போங்காலம்? ஏன் இவ்வாறு துன்புறுத்திப் பழிசுமக்கின்றீர்கள்?" என்று கேட்கில், அவ்வசட்டு வினைகள் அறிவில்லாதவைகளாகையால் மாறுகூற வகையற்றொழியும். இனி யான் என் கேள்விகளைத் தொடர்ந்து யாரிடத்தில் நிகழ்த்துவது? வேறோர்வகையும் தோன்றிற்றில்லை. இவ்வினைகள் எங்குத் தோன்றி நிகழ்ந்தன? என்பாலன்றோ? என்னிடத்தன்று. உண்மையில் என் னெண்ணங்களில் உதித்தன. அவ்வெண்ணம் மனத்தின் செயலன்றோ? ஆம். அறிந்தேன். "ஏ! கேடுகெட்ட பாழ்த்த கொடியமனக்குரங்கே! நீ செய்ததன்றோ இத்தனையும். விஷயாதிகள்மேற் பல்காற் சென்றுசென்று பற்று விளைத்துத் தொழில் புரிந்த வினைகள் எனக்குப் பேரிடர் தருவது நின் அறியாமைக்குறும்பினால் ஆனதேயன்றோ? இக்குற்றத்திற்கு நீ சொல்லும் சமாதா



னம் யாது? விளங்கப் பொருந்த விளம்புக" என என்மனத்தை வினவுவனேல், அது, "மடவோய்! நீ யாரைக் குறைகூறத் துணிந்தனை? யானோ நினக்கு நேர்பட்டலன்? கழுவுக்கேற்ற கோமுட்டிகதையா பேசுகின்றாய்! யான் வாயு என்னும் பூதத்தில் பஞ்சீகரிக்கப்பட்டவன். என்னியற்கை இமைப்பொழுதும் நிலையின்றிச் சுழல்வது. அத்தகைய என்னை அடக்கி நடத்தக் கடமைப்பட்டது நின் அறிவு. அஃது என்னை நன்னிலைமையில் இயக்கின் நான் அவ்வாறு செய்திருப்பேன். தீவினை விளையாது துன்பமும் நேராது. மதங்கொண்ட யானை அங்குசத்தால் அடக்கப்படாவிட்டால், ஓடுங்குதிரையை நடத்துவோன் நடாத்த வறியாவிட்டால், என்னாம்? அக்கதியே நீயும் அடைந்தாய். தவறு கருதிப்பார். நின் அறிவே நின்னைக் கெடுத்தது. என்னால் ஆயதொன்றுமில்லை. செல்க." என முறுக்காய் மொழிந்தகன்றது.

இங்ஙனம் மனம் காட்டிப்போந்த என் அறிவை முனிந்து, "அறிவெனப் பேர்பெற்ற மடமையே! நின்னால் நேர்ந்தனவே யானெய்தும் இடர்கள் பலவும். நின்னைத் துணைக் கொண்டு வாழ நம்பியிருந்தேனை வஞ்சித்தல் பெரும்பாதகமன்றோ? ஏன் இங்ஙனம் என்னை அலக்கழித்தனை? யாதுன் மறுமொழி? விரைந்து கூறுக." எனக் கடாவுவனேல், அது, "நண்ப! என்னைச் சினத்தல் அறிவன்று. உண்மையை உள்ளவாறுரைக்கக் கேள். நான் சுதந்தரமில்லேன். என்னுட் புக்கு நின்று இயக்கும் இறைவன் திருவருட் செயல் அங்ஙனமிருந்தது. ஆட்டுவிக்க ஆடும் பம்பரம் போன்று என்னை இயக்கச் செய்யும் வித்யாதத்துவம் இறைவன் ஆணைவழிப் பட்டது. அப்பரம்பொருள் அசைவித்தாலன்றி யாதும் அசைதற்கில்லை. எங்கே தவறுபாடுளது? கூர்ந்துகாணுதி. வீணேஜடப்பொருள்களைக் குறைகூறி யாவதொன்றில்லை." என்றுரைத்து மௌனங் கொண்டது. இந்நீண்ட விசாரணையினால் நான் பொருந்தியவுண்மையைத் தெற்றெனவுணர்வேனானேன். இச்சான்றுகளுடன் எழுத்துமூலமான சான்றாக வேதங்களும், எல்லாம் நின்செயலே யென்றும், எப்பொருளுமாகியும் அவை யல்லவாகியும் நீயேமாயம்புரிகின்றாயென்றும் உரைக்கின்றன. ஆகலால், ஒன்றைத் தாங்கிநிற்கும் ஆதாரப்பொருளும், அதனை இடமாகக்கொண்டு நின்றுவிளங்கும் ஆதேயப்பொருளும் நீயே யென்று கண்டேன். என்னை ஆட்டியான் ஆடலைக் கண்டுநிற்பவனும், என்னோடொக்க நின்றாடுகின்றவனும் அப்பலத்தாடும் ஒருநீயே! மோனமுற்றுணரும் ஞானத்தின் காட்சிப்பொருளும், உயிர்க்குலங்கட்கு மாறாது கருணைசுரந்தளிக்கும் வள்ளற்பெருமானும், ஈன்றெடுத்த அன்னை தந்தை முதலாயசுற்றத்தாரும், ஏனை எனக்கினிய எல்லாப்பொருள்களும் நீயேயாகின்றனை. இங்ஙனமிருப்ப, என்பாற்றவறுபாடு யாதெனத்தெளியகில்லேன் ஆயின், ஒன்றுளது. நீ இங்ஙனம் எல்லாம் செய்கின்

றனை என் வுணராமை குற்றமாகலாம். எனினும், அதுவும் நின்றிருவருளுணர்த்தினன்றி யானுணர்தல் கூடாமையின் பொருந்தாது. எங்கும் நிறைந்து எல்லாத் தத்துவதாத்துவிகப் பொருட்களுமாய், என்றுமுள்ளவனாய், எவற்றையும் கருவியின்றி யுணர்பவனாய், இன்பமே வடிவானவனாய் விளங்கும் பசுபதியே! என் குற்றமென்று சொல்லற்கியலாத நிலைமையில் என்னைத்துன்பங்கள்வந்து வருத்தல் ஏனோ? கூறுக.' என்னும் இப்பொருளில் இறைவனது சுதந்தரத் தன்மையும், உயிர்களின் உணர்த்த உணரும் பாரதந்திரியமும், பிறவியால் வரும் ஏதங்கள் வினையால் விளைவன வென்பதூஉம், அவ்வினைகளும் மனத்தின் சங்கற்ப விகற்பங்களால் உளவாதலும், மனத்தை அடக்கி நடத்தும் பொறுப்பு அறிவின் மேலதாதலும், அவ்வறிவும் தன்வயத்ததல்லாமையும் எல்லாம் இறைவன் திருவருள் வலியால் நிகழ்கின்றன வென்றுணர்ந்து யான் எனதென்னும் செருக்கற்று அம் முழுமுதற்கடவுளின் அருளை நெக்குநெக்குருகி இடைவிடாது நினைந்துய்ய வேண்டுமேயன்றி வேறுவழியில்லை யென்பதூஉம் மிகவும் வலியுற எடுத்து விளக்கப்பெற்றமை காண்க. இவ்வுண்மையையே நம் திருவருட்பிரகாச வள்ளலார்.

"நினைப்பித்தா நித்தா நிமலா வெனநீ
நினைப்பித்தா லேழை நினைப்பேன்—நினைப்பின்
மறப்பித்தால் யானும் மறப்பேன் எவையும்
பிறப்பித்தாய் என்னாலென் பேசு."

என அருள்வாராயினர்.

"சிவன் செயலாலே யாதும் வருமெனத் தேறேன்"

"உளவறிந் தெலாமுன் செயலாமென வுணர்ந்தோர்க்
களவிலா னந்த மளித்தனை யறிவிலாப் புன்மைக்
களவு நாயினேற் கிவ்வண மமைத்தனை……"

என இவ்வரும் பொருளையே ஆசிரியர் பிறாண்டும் கூறிச்செல்லுதலுமறிக.

இவற்றாற்போந்த வுண்மை, ஆகாமியம் பிராரப்தம் சஞ்சிதமென்னும் மூவகை வினைகளினும், பிராரப்தவினை துய்த்தே கழிக்கற்பாலதாகலானும், சஞ்சிதம் ஞான முதிர்ந்தவழிப் பற்றுகொழிவதாகலானும், பெரியோர் குறிக்கொண்டு நீக்கமுயல்வது ஆகாமியமொன்றனையே. அதுதானும் 'நான்செய்கின்றேன்' 'இஃது எனக்குரியது' என்னும் அகங்காரத்தால் ஏறுதலின், 'என்னாலாய தொன்றுமின்று. என்னை நடாத்தும் எம்பெருமான் அருள்வழி நேர்வனவே எவையும்.' என்று மெய்ம்மையுணர்ந்து, அம்முதல்வன் பேரருளைக் கணமும் மறவாது நைந்துருகிக் கண்ணீர்பெருகத் தன் முனைப்பின்றி ஏற்றபெற்றி ஒழுகி அவ் ஆகாமியவினையை அறமாற்றி இறைவன் திருவடிப்பேறு பெறலாமென்பதாம்.

———

உ

# அம்மை அப்பர்.

(கண்டாச்சிபுரம் திரு. வை. ச. இராமலிங்க முதலியார் அவர்கள்.)

விண்ணவர் விழையும் புண்ணியபூமியாகிய இந்நிலவுலகின்கண் காணப்படுகின்ற அசரசர வுயிர்த்தோற்றமாகிய சகல சீவராசிகளும் 'ஆண், பெண்' என்னு மிருபாகுபாட்டினை யுடையவைகளா யிருக்கின்றன. இவைகளிங்ஙனம் விளங்குதற்குக் காரண முற்று நோக்கின், 'தந்தையறிவு மகற்கு' 'தலைவ னெவ்வழி யவ்வழி யுலகம்' என்பதுபோல், இவைகளை யாக்கியோனாகிய கர்த்தா (தலைவன்) ஒருவன் தானே 'ஆண்பெண்' வடிவினனா யமைந்திருத்தல் வேண்டுமென்பது ஊகித்தறியக் கிடக்கின்றது. அவனே நாம் மேற்கூறிய 'அம்மை அப்பர்' என்னும் பரம்பொருள். இவன், தன்வயத்தன், தூயவுடம்பினன், இயற்கையறிவினன், முற்றுமுணர்பவன், இயல்பாகவே பாசங்களினின்றும் நீங்கினவன், பேரருளாளன் வரம்பிலின்பன், முடிவிலாற்றலுடையவன். இவனுக்குப் பிறப்பு மிறப்பும் இல்லை. இவ்வொருவனே 'இறைவன்—கடவுள்' எனப்படும் தெய்வப்பொருள். கடவுள் என்பது 'கடத்தல்' என்னும் பொருள்தந்து, ஆகுபெயராய் கடத்தலையுடைய பொருள்; அல்லது எல்லாவற்றையுங் கடந்தபொருளென்று ஆன்றோர்களால் கூறப்படுகின்றது. அதனைச் சித்தாந்த பரிபாஷையில், சிவம் என்றும், விமலன் என்றும், நின்மலசிவமென்றும், நிஷ்கள சிவமென்றும் பரஞ்சோதியென்றும், பரம்பொருளென்றும் பலவிதமாகக் கூறுவர். இத்தகைய இறைவர் அநாதி கேவலநிலையில் (கேவலநிலை—ஆன்மாக்கள், ஆணவமலத்தாற் கட்டுப்பட்டுச் செயலின்றி, அறிவொளி மயங்கி, ஒன்றுந்தெரியாமற் கிடக்கும்நிலை) அழுந்திக்கிடக்கும் ஆன்மாக்களின்மீது கொண்ட கருணையினால், ஆன்மாக்களின் மலவழுக்கைப்போக்கி மூலபண்டாரம் வழங்கும் திருவுள்ளத்துடன், ஆன்மாக்களுக்குத் தநு கரண புவன போகங்களைக் கொடுக்க விச்சைப்பட்டார். இந்த இச்சைதான் (Desire) அவரிடத்தில் முதற்கணெழுந்தது. இவ்விச்சைக்குத் தமிழில் 'அருள்' அல்லது 'சத்தி' என்று பெயர். இதனை நமது தாயுமானசுவாமிகளும் 'அருளொடுநிறைந்ததெது, தன்னருள் வெளிக்குளேயகிலாண்டகோடியெல்லாந், தங்கும்படிக்கிச்சை வைத்துயிர்க் குயிராய்த் தழைத்ததெது' என்று தமது பரசிவவணக்கத்தில் இச்சையே அருள் என்னு மபின்னசத்தி யென்று கூறுகின்றார். இச்சைக்கும் அருளுக்கும் வித்தியாசமென்னவென்றால், இச்சைபசுக்களிடத்துத்தோன்றுவது. அருள் இறைவன்மாட்டுத் தோன்றுவது. இவ்வருளே சிருட்டிக்குக்காரணம். இவ்வருளுக்குத் திருவருட் சத்தியென்றும்பெயர். இச்சை, அருள், திருவருட் சத்தி, இம்மூன்று மொருபொருட் கிளவிகள். இச் சத்தியின் றுணைவலி கொண்டே இறைவர் சகலாண்ட சராசர வுயிர்த்தோற்றங்கள் யாவையு மொருங்கே யுண்டாக்கினர். இவைகளிங்ஙனந் தோன்றுவதற்குக் காரணமாயிருந்ததித் திருவருட்சத்தியே யாதலால், திருவிளையாடற் புராணஞ் சொல்லவந்த நமது பெரியாராகிய பரஞ்சோதிமுனிவர், 'சத்தி யாய்ச்சிவமாகித் தனிப்பர, முத்தி யான முதல்' என்று முதற்கண் துதி கூறுகின்ற

னர். சீவர்கள்பால் இரக்கம்கொண்ட நமது அருளிறைவன், நம் போன்ற உயிர்கட்கு அப்பனாக மட்டு மாகான்; அம்மையுமாவான் என்பது, நம் முன்னோர்களின் சித்தாந்தம். எனவே, இம்மூர்த்தத்தை நமது பண்டைப் பெரியோர்கள் 'அம்மை அப்பர்' எனவழங்கினர். திருவாசகமாந் தெய்வத்திருமறையோதிய நமது மணிவாசகவள்ளல் உள்ளம் நெகிழ்ந்த பேரன்பினால் 'அம்மையே! அப்பா!! ஒப்பிலாமணியே!!!' என்று வாயார விளித்தழைத்தோதி மகிழ்கின்றனர்.

'நந்தம்மை யாளுடையாள், தன்னிற் பிரிவிலாவெங் கோமான்' என்ற சுருதிப்படி சத்தியும் சிவமுமானவிக்கருணைத் திருவடிவு, மரத்தில் வயிரம் போலவும், நீரிற்குளிர்ச்சி போலவும், அக்கினியிற்சூடு போலவும், இரவியிற் கதிர் போலவும், மதியிற்கலை போலவும், மணியிலொளி போலவும், மலரில் மணம் போலவும், பாலிற் றேனில் சுவை போலவும், பண்ணிலோசை போலவும் குண குணி சம்பந்தமாய்ப் பிரிக்க வொண்ணாது விபுவாய் நிற்கும். ஆதலால், 'சிவத்தை யின்றிச் சத்தி யில்லை; சத்தி யின்றிச் சிவமு மில்லை.' என்பது போதருகின்றது. இதனை,

'அருளது சத்தி யாகு மரன்றனக் கருளை யின்றித்
தெருள்சிவ மில்லை யந்தச் சிவமின்றிச் சத்தி யில்லை.'

என வரும் சிவஞானசித்தித் திருவிருத்தத்தா னுணர்க, எள்ளுக்கு ளெண்ணெய் போல் எங்கும் நீக்கமற நிற்கின்ற பெருமான், தனது வாம பாகத்தில் பார்வதி யென்கின்ற சத்தியோடுற்று நீங்காது,

'துரியங் கடந்தசுடர்த் தோகையுட னென்றும்
பிரியாது நிற்கின்ற பெம்மான்'

எனப் பெரியார் பலரும் கொண்டாடித் துதிக்க, அம்மை அப்பர், பெண்ணொரு பாகனாய் விளங்குவ தெற்றுக்கோ வெனின்,

'சிவன் சத்தியோடுறிற் சகம் விரியும்
சிவன் தனித்திடில் விரிசக மொடுங்கும்'

என்னு மான்றோர் முதுமொழிப்படி, இவ்வுலகம் தனக்குத்தானே, இயற்கையிலுண்டாகவும், உலகுயிர் பலவு மின்பந் துய்க்கவுமேயா மென்க. அவ்வாறின்றிச் சிவன் றனித்திடிற்;

:பெண்பா லுகந்திலனேற் பேதா யிருநிலத்தோர்
விண்பாலி யோகெய்தி வீடுவர்காண் சாழலோ!'

என்ற திருவாசகமுடையார் திருவாக்கின்படி சகல ஜீவராசிகளும் உலகின் பவிச்சையற்று, ஆண் பெண் புணர்ப்பின்றி, சிருட்டித் தொழிலே நடைபெறா தொழியு மென்க.

'ஆகமங்க ளெங்கே யறுசமயந் தானெங்கே
யோகங்க ளெங்கே யுணர்வெங்கே—பாகத்து
அருள்வடிவுந் தானுமா யாண்டிலனேல்'

என்ற திருக்களிற்றுப்படியார் திருவாக்கின்படி, தநு கரண புவன போகம் என்கின்ற இப் பிரபஞ்ச வுற்பத்தியும், வினைக்கீடா யமையும் போகங்கள் பல நுகர்தலும், இரு வினை யொப்பு மலபரிபாகம் சத்திநிபாத முற்று, அழிவிலின்ப முத்தி யெய்தலு மில்லா தொழியு மென்பது திண்ணம். இது நோக்கியே நமது மணிவாசகரும்,



'நானுமென் சிந்தையும் நாயகனுக் கெவ்விடத்தோம்
தானுந்தன் தையலுந் தாழ்சடையோ னாண்டிலனேல்'

என்று கூறுகின்றனர். ஆதலின், சத்தியும் சிவமும் சேர்ந்து ஒன்றுபட்டிருத்தலினால்தான் இவ்வுலக வியாபகமும் சிருட்டி, திதி, சங்கார ,திரோபவ, அனுக்கிரக மென்கின்ற பஞ்ச கிருத்தியங்களும் நடைபெறுகின்றன. 'சிவமெனும் பொருளு மாதி சத்தியொடு, சேரி னெத்தொழிலும் வல்லதாம்' என்பது பிரமாணம். போக மோக்ஷமென்னும், இம்மை யம்மை நலன்களிரண்டினையு மவாவுவோர்; 'அவனரு ளாலே யவன்றாள் வணங்கி' என்றபடி மாதொருபாகனாய் விளங்குமிம் மூர்த்தியின் வழிபாடின்றி யதனை யடைத லியலாத காரியமாகும். இதனாற்றான், இல்லற வாழ்க்கையை யறவேயொழித்துக், காமமுனிந்து நெடுஞ்சடைதரித்துக் கவின்ற கல்லாடை மேற்புனைந்து, யாமெலாம் வணங்குந் துறவியா யிருந்து, நிஷ்காமிய தவம்புரியும் யோகியர்களுங்கூட, இப்பெண்ணொருபாகனை வழிபட்டே இஷ்டசித்தியடைகின்றனர். பார்வதியைப் புறக்கணித்த, பிருங்கிமகா முனிவர் தன்பலமுழுது மிழந்து பரதவித்தா ரென்பதை யாரே யறியார்? பூர்வம் விண்டுமூர்த்தியானவர் இந் நாரிபாகனைவழிபட்டே மகப்பேறடைந்தனர்.

சிவநேசச்செல்வர்களே! மனைவிமக்கள் செல்வமென்னும் இகபோக வாழ்வையும் பெறற்கரிய பரபோகமாகிய நிரதிசயானந்தப் பெருவாழ்வையும் பெறவேண்டின், பெண்ணொருபாகப் பெருந்தகையாகிய அம்மையப்பரை வழிபடுதலே சாலச்சிறந்ததாகலின், அவனருளாலே அவன்றாள் வணங்குவோமாக!

---

## செந்தமிழ் செழிக்கும் வழி.

தமிழகப் பெரியீர்!

ஒவ்வொரு நாட்டவரும் ஒவ்வொரு மொழிக்குரியராவர். தமிழகத்தவர் தமிழ் ஒன்றற்கே யுரிமைபூண்டவர். சேர்க்கை நலத்தானே பரமொழியும் படித்துப் பேரை விளக்கி வருகின்றனர். எப்படியும் தமிழ்நாட்டவர் தமிழைச் செழிக்கச்செய்வதே யாவர்க்குங் களிப்பையளிக்கும்.

இம்முறை மதுரைத் தமிழ்ச்சங்க மாணவையினர் தமிழ் இலக்கணம் ஒருபகுதியும் தமிழ் இலக்கியம் மற்றொரு பிரிவுமாகப் பாகுபாடு செய்து பரீக்ஷிக்கத் தீர்மானஞ் செய்துள்ளார்கள். இந்நியமனப்படி செந்தமிழ் மாணவர் நன்கு பயின்று பரீக்ஷையில் சித்தி பெறுவது இலகுவாகும். ஆதலின், பெரியோரும் மாணவரும் நந்தமிழ்ப் பெருமையை நாடி நலமுறக் கற்று முன்வரவேண்டும் என்று எனது உண்மை மகிழ்வைக் காட்டி வேண்டுகின்றேன்.

வ. மு. இரத்திநேசுவரையர்.

உ

# தெய்வ மூர்த்த தத்துவார்த்தம்.

(கண்டாச்சிபுரம் திரு. வை. ச. இராமலிங்க முதலியா ரவர்கள்.)

"நற்குஞ் சரக்கன்று நண்ணிற் கலைஞானங்
கற்குஞ் சரக்கன்று காண்"

உலகத்திலே, எல்லா மதங்களும் கடவுள் ஒருவர் உண்டென்பதை யொப்புக்கொள்ளுகின்றன. இவ் வுலகுக்கெல்லாம் கடவுள் ஒருவரே. அவரை யறிய மார்க்கம் பல.

"யாதொரு தெய்வங் கண்டீ ரத்தெய்வ மாகி யாங்கே
மாதொரு பாக னார்தாம் வருவர்."

என்பது நமது பண்டைப் பெரியோர்கள் கொண்ட முடிபு. மனவாக்கினுக் கெட்டாத சமயாதீதப் பரம்பொருள் அருவம் உருவம் அருவுருவமாக உள்ள தென்பர். அன்றி, பல கடவுள் உளர் எனக் கூறுவார், அறிவுடை மக்களில் எவருமிலர். சைவம், வைணவமுதலிய உட்சமயங்களிலே பல கடவுள் மூர்த்தங்கள் காணப்படுகின்றனவே. பல மூர்த்தங்களையும் வழிபாடு செய்கின்றார்களே! கடவுள் ஒருவரா? பலரா? என்ற ஆசங்கை நிகழலாம்.

"தெய்வம், ஒருவனே யென்று வுணரவல் லீரேல்
அருவினைக ளோந்து மறும்.

என்பது நம் ஒளவைப் பிராட்டியாரி னமுதவாக்கு. பொன் ஒன்றே பணி பல என்பது போன்று, கடவுள் சர்வசக்தியுடையவராதலால், அன்பர்கள் யார்யார் எவ்வித பக்தியோடு எந்தெந்த விதமாய்த் தம்மைப்பாவனைசெய்து வழிபடுகின்றார்களோ, அந்தந்த மூர்த்தமாகவே அவர்களுக்குக் காட்சியளிக்கின்றனர். ஒவ்வொன்றும் ஒவ்வொரு தத்துவார்த்தத்தையும், இறைவரின் எண்குணம் செயல் முதலிய சூக்கும கருத்துக்களையுந் தன்னுள்ளடக்கிக் கொண்டிருக்கின்றன. ஆழ்ந்த கருத்துடன் ஊன்றிப் பார்த்தறியும் நுண்ணறிவாளர்க்கே இது புலனாகும். பேரிறைவராகிய சிவபரம்பொருளின் அருட்டிரு மூர்த்தங்கள் பல. அவைகளுள் பிரணவப் பொருளாம் பெருந்தகை ஐங்கரக்கடவுளாகிய விநாயகமூர்த்தத்தின் தத்துவம் வருமாறு:--

விநாயகர் என்னும் திருநாமத்தானே, மேலானவர் என்பது மிகவிளக்கமாக அறியக்கிடக்கின்றது. சிவபெருமானின் வேறாகாத 'ஓம்' என்னும் மகாமநுவினின்றும் பூதாங்கம், தேவாங்கம், மிருகாங்கம் என்னும் மூன்றங்கங்களுடன் பிரணவ சொரூபியாய், யானைமுகவடிவுடன் தேவர் துயரகற்றுவான், கஜமுக சூரசம்மார நிமித்தந் தோன்றினார் என்பது சரிதம்.



விநாயகர் என்னுந் திருநாமத்திற்கு, அறிவுடைப் பெருமக்கள் கூறும் பொருள்களாவன:—

1. வி - மேலான, நாயகர் - தலைவர்.

2. வி - கல்வி, நாயகர் - தலைவர், சகல கலைகளுக்கும் தலைமை பூண்டவர் தன்னையடைந்தார்க்கு கல்வியை எளிதிலளிக்க வல்லவர். இங்கு பொல்லாப்பிள்ளையார் நம்பியாண்டார் நம்பிக்கு அருளினமையும் பிறவும் கண்டுதெளிக.

3. வி - திசை, நாயகர் - தலைவர் எனக்கொண்டு எத்திசைக்கும் தலைவர்.

4. வி - கண்போன்ற, நாயகர் - தலைவர், கண்ணிற் சிறந்த வுறுப்பின்மைபோலத் தம்மிற் சிறந்த தலைவர் இல்லாதவர்.

5. வி - அறிவு, நாயகர் - தலைவர் (மேன்மையுற்றவர்) ஞானசொரூபி.

"விக்கினவிநாயகர், விக்கினராசர்" என்னுந் திருநாமங்களும் "சர்வவிக்நோபசாந்தயே" என்னு மந்திரமும், தம்மை வழிபடு மடியவர்களின் இடர்களை பவரென்பதை வலியுறுத்தும்.

பிரணவ மகாமந்திரத்தினின்றும் சகளீகரித்து, சிவன் சத்தியென்னு மிவ்விருவரது அம்சமாய்த் தோன்றினமையின், இவர் பிரணவசொரூபர். இவ்வுலகமோ வட்டவடிவு. அண்ட வடிவு அதாவது பிரணவவடிவு. பிரணவமோ யானைவடிவு. அவ்வடிவோ விநாயகர்வடிவு. எனவே, இவ்வுலகமெல்லாந் தாமே யென்பதும், தாமே யுலகமென்பதும் பெறப்படுகின்றது. தாமே உலகவடிவாயும், பிரணவசொரூபராயும் விளங்குதலை யுணர்த்தவே, யானைவடிவை ஏற்றனரென்ப. திரிநேத்திரங்களைக் கொண்டதினால், ஆதித்தன், சந்திரன் வன்னி என்னு முச்சுடர்களையுங் கண்களாகக் கொண்டு அவைகளுக்கு ஒளிகொடுத்து நிற்பவர் என்பது புலனாம். காயத்திரி மகாமந்திரத்தின் மூன்று பாதங்களின் பொருளா யிருப்பவர் தாமேயென்பதும், இதனால் வெளியாகின்றது. விசாலமான செவியை (முறம்போன்ற காதுகளை) உடையவராயிருத்தல் நிரவதி சர்வக்ஞத்துவ முடையவர் என்பதை யுணர்த்தும். ஐந்து கரங்கொண்டமையானது, சிருட்டி திதி சங்காரம் திரோபவம் அனுக்கிரஹம் என்னும் பஞ்சகிருத்தியபதி தாமே யென்பதையும், வரம்பிலாற்றலுடையவ ரென்பதையுங் காட்டாநிற்கும். ஒற்றைக்கொம்பு பரஞானபதி தாமொருவரே யென்பதையும், ஒடித்தகொம்பு அபயப்பிரதான முடையவ ரென்பதையும் தெரிவிக்கின்றன. கயமுகா சூரனை சம்மரித்துத் தேவர்களை இரக்ஷித்தமையே இதற்கோர் சான்றாமென்க. விநாயகர் திருமுகம் ஒருபக்கம் தந்தமாகிய கொம்பு காணப்படுதலின் ஆண்வடிவென்றும், மற்றொருபக்கம் அத் தந்தம் காணப்படாமையின் பெண்வடிவென்றுங்காட்டி, 'ஆண்பாலா!

பெண்பாலா?' என்றையுறுவார்க்கு, எப்பாலுங்கடந்த அப்பாலுக்கப்பாலாய்நிற்கும் ஒருதனிப் பெருந்தலைவர்தாமே யென்பதையுமுணர்த்தும். கன்னமதம்கபோலமதம், பீஜமதமென்னும் மும்மதங்களை யுடையவராதலால், இச்சாஞானக்கிரியைகளையும், (சத்து சித்து ஆநந்தம்) சச்சிதாநந்தத்தையும் உடையவரென்பது தெளிவாகின்றது. சடைமுடிதரித்தலினால், வேதாந்தப் பொருள்தாமே யென்பதும் யோகியர்களால் நித்தியமுந்தியானிக்கப்படுபவர்தாமே யென்பதும் தெரியக்கிடக்கின்றன. பாலசந்திரனை வேணியில்தரித்திருப்பது, உண்மையடியவரை உயர்நிலைக் குய்ப்பவரென்பதையும், சர்வக்ஞத்துவர் என்பதையுங் குறிப்பிடுகின்றது. உபவீதந்தரித்தமையானது, பரப்பிர்ம்மமாகி எங்கும் நிறைந்த வன்னிதாமே யென்பதும், பிராமணர்தாமே யென்பதும் புலப்படுத்துகின்றது. சர்ப்பாபரணமோ பாம்புவடிவமாகிய குண்டலிசத்தியை யுணர்த்தி, அவற்றின்விரிவு சுருக்கங்களை பிரபஞ்சவொடுக்கத்தோற்றத்தைக் காட்டுங்குறியாய் ஜகத்காரண பூதரென்பதையுணர்த்துகின்றது. துதிக்கையானது, அணுவுக் கணுவாயும் மகத்துக்கு மகத்தாயும் விளங்கத்தக்கவ ரென்பதைக் காட்டுகின்றது. லம்போதரமுடைமையானது, சர்வ ஜீவோற்பத்திக்கும் கர்ப்பதானமாயுள்ளவர்தாமே யென்பதைக் குறிப்பிடுகின்றது. அறுகு சூடியது, சர்வாந்தர்யாமி தாமேயென்பதையும், மலப்பிணியைத் தணிப்பவர்தாமே யென்பதையும் விளக்குகின்றது. மோதகமேந்தியது, உலகமும் அதிலுள்ள சேதனசேதனங்களும் தன்னிடத்தடங்கியதே யென்பதைத் தெரிவிக்கின்றது. மூஷிகவாகனங் கொண்டமையானது, வண்ணமும் வடிவுங் காட்டாப் பேரிருளாகிய ஆணவமலமே, ஈண்டுவண்ணமும் வடிவுங் காட்டி மூஷிகமாய்ப் பிரணவமூர்த்தியினடிக்கீழ முந்திவாகனமாய் வலிகெட்டு நின்றது என்பதை யுணர்த்துகின்றது. ஒடிந்தகொம்பைத் தமதுகையிலேந்தி யிருக்குந்தோற்றம், துஷ்டநிக்கிரக சிஷ்டபரிபாலன கர்த்தா தாமென்பதையும், பாரதக்கதையை மேருமலையின்மீது வரைந்தருளிய சரித்திரத்தையும் ஞாபகப் படுத்துகின்றது. விநாயகமூர்த்தியின் திருவருளின்றி, எக்காரியமும் நிர்விக்கினமாக முற்றுப்பெறாதென்பதே வேதாகம புராணங்களின் றுணிபு. அப்பெருமானை மெய்யன்போடு வழிபடுவோர், கல்விசெல்வம் சற்புத்திரப்பேறு தீர்க்காயுசு, சத்துருஜயம், இராஜவசியம் முதலிய சர்வாபீஷ்டங்களும் பெறுவாரென்பது திண்ணம். இம்மூர்த்தியின் மகிமையாதியனவும், பூஜாக்கிரம விரதானுஷ்டானங்களும், பிறவும் பார்க்கவபுராணமென்னும் விநாயகபுராணத்திற் காண்க.

இவ்வாறே, ஏனைய மூர்த்தங்களின் தத்துவார்த்தங்களையும் விளக்குவான் விநாயகப்பெருமான் விமலச் சேவடியைத் துணைக்கொள்வோமாக!

# தாம்பூலம் தரித்தல்.

(கண்டாச்சிபுரம், திரு. அ. முத்தையப் பிள்ளை யவர்கள்.)

தாம்பூலந் தரித்தலாவது, வெற்றிலை, பாக்கு, சுண்ணாம்பு, இவைகளை அளவோடுகூட்டி மெல்லுதலாம். நம் நாட்டார் பெரும்பாலும் இத் தாம்பூலம் உபயோகித்து வருகின்றனர். பூஜாகாலங்களிலும் தேவதைகளுக்குத் தாம்பூலம் சமர்ப்பிக்கின்றனர். இத்தாம்பூலந்தரிக்கையில் ஜாதிக்காய், ஜாதிபத்திரி, ஏலக்காய், கிராம்பு, வால்மிளகு முதலிய வாசனாதிரவியங்களும் சேர்த்துக்கொள்வதுண்டு. தாம்பூலந்தரித்தலால் முகவசீகரமும், உஷ்ணமூலத்தினாலுண்டாகும் வாய்நாற்ற நிவர்த்தியும் உண்டாகின்றன. அன்றியும், உண்டஉணவையும் ஜீரணிக்கச் செய்கிறது. ஆயினும், 'அளவுக்கு மிஞ்சினா லமிர்தமும் விஷம்' என்றபடி வெற்றிலையை அதிகமாயுபயோகித்தால் ஆகாரம் ஜீர்ணிக்காமல் மந்தத்தை யுண்டாக்குமென்பர். எனெனில் பசியோடிருக்கு மொருவன் தாம்பூலந்தரிப்பானாயின் அவனது பசி சற்று நிவர்த்தியாகின்றதாதலின் அதிகமாயுபயோகிப்பவனுக்கு உணவு ஜீர்ணமாகாதென நிச்சயமாகக்கூறலாம். ஜீர்ணத்திற்கு உபகரணமாயுள்ளது உமிழ்நீர். அவ்வுமிழ்நீர் அடிக்கடி தாம்பூலந் தரிப்பதால் மிகுதியாக வெளிப்படுதலால்; ஜீர்ணந்தடைப்படும். சதா தாம்பூலந் தரிப்பின் பித்தம் அதிகரிக்கும். அதனாலும் ஜீரணந் தடைப்படுமென்பது புலன்.

'தாம்பூலம்......காமோத் க்ஷேபனம்' என வடமொழியில் வெற்றிலையை யுபயோகிப்பதால் மிருக சுபாவம் அதிகரிக்கும் எனக்கூறப்பட்டிருக்கிறது. இதனாற்றான் 'கைம் பெண்ணிற்கும், மதாசார வொழுக்கமுறைமைகளுக்கிசைந்து மணந்து கொள்வேனென்று பிர்மச்சரிய விரதம் பூண்டு பரிசுத்த ஜீவியஞ்செய்பவனுக்கும், சந்நியாசிக்கும், தாம்பூலம் பசுவின் மாம்ஸத்திற்குச்சமம்' என்னும் கருத்தமைய அவ் வடநூலார்,

"தாம்பூலம் விதவாஸ்தி ரீணும், யதீனும் பிரம்மச் சாரிணும்
தபஸ்விணும் சவிப் ரேந்திர, கோமாம்ஸ சதிர்சம் துருவம்"

எனக் கூறியுள்ளார் மேற்கூறியவர்களுக்கு மிருகசுபாவம் உண்டாயின் அன்னோரது நிலைகுலைந்து விடுமாதலின், அவர்கள் எக்காரணங்கொண்டும் தாம்பூல மருந்தலாகாது.

தாம்பூலம் அடிக்கடியுபயோகிப்பதால் பல்லிடுக்குகளிற் சுண்ணாம்புக் கறைபடிந்து கூடியசீக்கிரத்தில் பற்களின்மூலம் பலமிழந்து பற்கள் விழவாரம்பிக்கின்றன. தவிர, நாக்குத்தடிப்பேறி உருசியறியுந் தன்மையுங் கெடுகின்றது. இதனாலன்றோ? நம்மேலோர்,

"தாம்பூல அத்யுப யோ காத்யத், ஸ்லேஷ்ம பித்த அனிலாஸ் ரிதா
தேக திரிக்கேச தந்தக் கினி, ச்ரோத்ர வர்ன பலக்ஷய"

தாம்பூலத்தை அதிகமா யுபயோகித்தால், தேகம், கண்கள், தலைமயிர், பற்கள் செவிகள் ஆகிய இவைகளின் பலம்குன்றும் என மொழிந்துள்ளனர்.

நோய் கொண்டவரும், இளைப்புள்ளவரும், நாவறட்சி யுடையவர்களும், தாம்பூலம் உபயோகிப்பார்களாயின் சில வேளையில் மரணாவஸ்தையையுங் கொடுக்கும்.

"தாம்பூல மஹிதம் ப்ரோக்தம்
சரீரே ரக்த துர்ப்பலே
ஜ்வர ஆஸ்ய சோஷ, பித்தாஸ் ருக் மத
மூர்ச்ச அக்ஷிரோ கிஷு"

என்னும் ஸ்லோகப்படி காய்ச்சலாயிருப்பவர்களும், வாய் காய்ந்திருக்கும் போதும், பித்தத்தின்மூலம், உண்டான கெடுதியால் இரத்தத்தில் மாறுபாடும் கிரமத் தாழ்வும் உண்டாயிருக்கிறபொழுதும், மூர்ச்சையடைகிறவர்களும் கண்ணோ யுடையவர்களும், பலஹீனர்களும் தாம்பூலம் உபயோகிக்கவே கூடாது.

நம் நாட்டுச் சகோதர சகோதரிகளிற் பெரும்பான்மையோர் இத்தாம்பூலத்தோடு 'புகையிலை' யைச்சேர்த்து மெல்லுகின்றனர். இது இலாகிரி வஸ்துக்களிலொன்று. முற்காலத்தில் இதனை புகை (சுருட்டு) பிடித்தலுக்கே யுபயோகித்து வந்திருப்பரென இதன் பெயராலறியக்கிடக்கின்றது. தற்போது வாய்க்கும் மூக்குக்கும் செலுத்திவருகின்றனர். புகையிலையை எந்த விதத்திலாயினும் ஒருவன் உபயோகிக்கப்பழகிவிடின் அது அவனை விட்டு எளிதில் நீங்காது. புகையிலையைத் தாம்பூலத்தோடு கூட்டி மெல்லுவதால் நாவறட்சியும், பலஹீனமும், பித்தமும், மாரடைப்பும் ஏற்படும். இதனால் பெருத்த கஷ்டத்தையடைய வேண்டி வருகிறது.

"மருந்தை முறித்துவிடும் வாய்வறளச் செய்யும்
திருந்து பலவீனஞ் சேர்க்கும்—பொருந்துபித்தம்
உண்டாக்கும் விந்தழிக்கும் ஓது புகையிலையைக்
கண்டார்க்கு மாகாது காண்"

என்னும் வைத்திய நிபுணர்கள் வாக்குப்படி புகையிலையை முற்று மொழித்துவிடுதல் மேலாம்.

இதுகாறும் கூறியவாற்றால் தாம்பூலத்தை யடியோடு நீக்கிவிட வேண்டுமெனக் கூறுவதாக நேயர்கள் கருதலாகாது. தாம்பூலம் காலை, உச்சி, மாலை யாகியமூன்று பொழுதுகளில் மட்டும் உபயோகிக்கலாம். அவையும்,

"காலைப் பிளவதிகங் கட்டுச்சி நீறதிகம்
மாலை யிலையதிக மாயருந்தில்—வேலைநிலக்
காலை மலங்கழியுங் கட்டுச்சி தீபனமாம்
மாலை மணங்குலவும் வாய்"

என்றபடி காலையில் பாக்கு அதிகமாயும் சுண்ணாம்பு வெற்றிலை குறைவாகவும், உச்சிநேரத்தில் சுண்ணாம்பு அதிகமாகவும் வெற்றிலைபாக்கு குறைவாகவும், மாலையில் வெற்றிலை அதிகமாயும் பாக்கு சுண்ணாம்பு குறைவாகவும் சேர்த்துமென்று, முன் ஊறுகிற ஜலத்தில் நஞ்சுகலந் திருப்பதால் அதை யுமிழ்ந்து விட்டு அருந்தவேண்டும், காலையில் பாக்கு மிகுதியாகச் சேர்ப்பதால் மலப்பிரவிருத்தியும், உச்சியில் சுண்ணாம்பு மிகுதிப்படுவதால் பசியும், மாலையில் வெற்றிலை மிகுதியால் வாய்மணமும் உண்டாகின்றது.



திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீ மெய்கண்ட தேசிகன் திருவடி வாழ்க.

# முன்னுரை.

வைதிக சைவத்தின் ஞானபாதத்தைத் தருக்க முறையில் நிர்ணயித்துச் செல்லுந் தமிழ் நூல்கள் பதினான்கு. அவை சித்தாந்த சாத்திர மெனவும், மெய்கண்டசாத்திர மெனவும் படும். ஸ்ரீமெய்கண்டார் முதலியோர் அவையிற்றின் ஆசிரியராவர். இந்த இருபா இருபஃது அப் பதினான்கனுள் ஒன்று. இதனை யியற்றிய மகந்நியர் ஸ்ரீமத் அருணந்தி சிவாசாரிய சுவாமிகள். ஸ்ரீமத் அருணந்தி சிவாசாரிய சுவாமிகள் தம் ஞான தேசிக ரத்னமாகிய ஸ்ரீ மந் மெய்கண்ட சிவாசாரிய சுவாமிகளிடம் வைதிக சைவ ஞான பாதத்தின் பல நுணுக்கங்களைச் சங்கைவடிவிற் பாடம் ஒப்பித்திருக்கின்றார்கள். அச் சங்கைகளின் தொகுதிதான் இந்நூல்.

இக்காலை ஒருவன் சைவ சித்தாந்தக் கருத்துக்களை உரைச்செய்யுளிலோ பாச்செய்யுளிலோ தனிநூல் செய்து உலகுக்கு உபகரிக்கலாம். ஆனால், எத்தனை தொன்னூல்கள் இக்காலத்தார்க்குப் பொருள் விளங்காமற் கிடக்கின்றன? அதனால், அவர்கள் அந்நூல்களைப் பயிலாமலும், அவற்றின் ஆசிரியர்களைக் கௌரவியாமலும் புறமாகின்றார்கள். ஆகையால், அவன் பழைய பிரமாண நூல்களுக்குத் தெளிவான உரைகளை யெழுதி வெளியிடின், தன் கருத்து நிரம்புவதோடு அந்நூல்களையும் நூலாசிரியர்களையும் பெரும்பாலார்க்கு அறிமுகப்படுத்திய புண்ணியத்தையும் பெறுவான். நான் சித்தாந்த நூல்களுக்கு உரையெழுத நேர்ந்த காரணங்களுள் இதுவும் ஒன்று. ஆகையால், நான் இந்தக் கிரந்தத்துக்கும் புத்துரை செய்யலானேன். இது, பதவுரை பொழிப்புரை கருத்துரை யாகிய மூன்றும் அடங்கியது. இந்நூலுக்குப் பிறர் செய்த உரைகளும் உண்டு. என்னுரையும் நூற்பொருளை மாணவர்மனதில் எளிதிற் பதியவைக்கும் பான்மை யுடையதென்று வைதிக சைவ சீலர்கள் துணிவார்களாயின், அவர்களுக்கு என்னையும் இந்நல்லுழைப்பில் மேலுமேலும் உத்ஸாகப்படுத்தவேண்டுவது கடனாகும்.

நான் இதுவரைத் திருவருட்பயன், கொடிக்கவி, போற்றிப்பஃறொடை, வினாவெண்பா என்னும் நான்கு நூல்களுக்கும் புத்துரை யியற்றி அதைப் புத்தகமாக்கி வெளியிட்டுள்ளேன். வைதிகசைவ சாத்திரபண்டிதர் பலர் அவ்வுரைகளை ஊன்றிப்படித்து மகிழ்ச்சிமேலிட்டுப் பல படியாலும் புகழ்ந்தெழுதி எனக்கு விடுத்த கடிதங்கள் அநேகம். சென்னை வேதாகமோக்த சைவ சித்தாந்தசபைத் தலைவர்

II

ஸ்ரீ மாந் - நல். கண்ணப்பமுதலியாரவர்கள் 'சித்தாந்த சாத்திரங்கட்குத் தங்களுடைய உரைகள் மேலானவை யென்று மதிக்கிறேன். இம்மாதிரியாகவே யேனைய நூல்கட்கும் தங்களுடைய உரை வெளிவருமாறுமெய்கண்டதேவர் மெல்லடிவாழ்த்துகின்றேன்.' என்றும், '...கண்டு அளவிலா வானந்த வாரிதியிற் றிளைத்தேன். இப்புத்தகங்கட்கு அநேக உரைக ளிருப்பினும், இவ்வளவு தெளிவாகவும் சுலபமாகவும் தெரிந்துகொள்ளும்படியான வழியி னமைத்திருப்பதைக் காணுந்தோறும் அளவிலா மகிழ்ச்சி யடைகின்றேன். சித்தாந்த சாத்திரங்கள் முழுமைக்கும் இவ்வளவு தெளிவான நடையில் உரை வெளிவந்திருக்குமாயிற் பலருக்கு முபயோகப்பட்டிருக்கும். மெய்கண்ட சிவத்தின் முழுமுதற் பெருங்கருணை முன்னின் றருள்புரியுமாறு வாழ்த்துகிறேன்.' என்றும் எனக்கு எழுதியுள்ளார்கள். அவர்கள்தானே இவ் விருபா விருபஃதுப் புத்துரையைப்பற்றித் 'தாங்கள் விடுத்த இருபா விருபஃதுப் பதவுரையால் என்னுடைய சந்தேகவிபரீதங்கள் தெளிவுபெற்றன.' என்றும் வரைந்துள்ளார்கள். இங்ஙனமாய மற்றைப் பெரியார் கடிதங்களையும் இதில் காட்டினால் விரியும். என்னை நானே புகழ்ந்துகொண்ட தோஷமும் எனக்குப் பலிக்கும். ஆகலின், அவசியம் நேர்ந்த சமயத்துக்கு அவ்விஷயங்களை வைத்துக்கொண்டு, இவ்வுரையை இங்குச் சுருக்குகின்றேன். அந்நான்கு உரைகளும் புத்தகமாதற்குச் சிலசிவபுண்ணியசீலர்கள் பணவுதவி செய்தார்கள். அப்பால் எனது மற்ற நூலுரைகளை யச்சிட எந்தத் தருமவான்களும் கிடைத்திலர். முன் உதவிய செல்வர்களிடம்போய் அடிக்கடி உதவிகேட்கவோ எனக்கிஷ்டங்கிடையாது. கடைசியாகப் பலவான்குடிச் 'சிவநேசன்' அதிபர் ஸ்ரீமாந் ராம. கு. ராம. இராமசாமிச் செட்டியார் அவர்களுக்கு 'இவ் விருபாவிருபஃதுப் புத்துரையைச் சிவநேசன் அநுபந்தமாக அச்சிட்டு உதவலாமா?' என்று நான் விண்ணப்பமொன் றனுப்பினேன். எப்போதும் ஏழைபங்காளன் இன்னருள் வசத்தில் நின்று வைதிக சைவத்துக்குத் தொண்டாற்றி வரும் அப் பெரியார், என் வேண்டுகோட்கு உடனே இணங்கினார்கள். வெகு சீக்கிரத்தில் எனது புத்துரை அவர்கள் முயற்சியால் அழகிய புத்தகமாயிற்று. ஸ்ரீமாந் செட்டியாரவர்களுக்கு நான் என் மனநிறைந்த ஆர்வத்தோடு வந்தனத்தைச் செலுத்திக்கொள்ளுகிறேன்.

பேட்டை, }
பவ-ஆவணி-கூ }

ஆ. ஈசுரமூர்த்திப் பிள்ளை,
உரையாசிரியன்.



மணமனைச் சென்று வந்த செவிலி
தலைமகள்கற்பு நற்றாய்க்கு உணர்த்தல்.

376. நடைசேர் பயணம் பொருந்தினர்க் கென்று நலமடையத்
தொடைசேர் கருங்குழ லம்மாது மங்கலந் தோன்றநின்றாள்
விடைசேர் முதுகுன்றர் வெற்பிடை யாயே வியன்புவிவிட்
டடைவோர் குறிப்பின் படிபுரி யாளவ் வருந்ததியே. (அ)

செவிலி நற்றாய்க்குத்
தலைமகள் மனைவாழ்க்கைத் தன்மை உரைத்தல்.

377. சேமன் கொடியர் திருமுது குன்றர் சிலம்பிலன்னே
வீமன் புதல்வி நளன்றோளின் மாலையை வேயுமில்லிற்
காமன் றனைநிகர் கட்டழ கெய்திய காந்தனுடன்
பூமன் கருங்குழ லம்மாதின் மாடம் பொலிந்ததுவே. (கூ)

செவிலி நற்றாய்க்கு இருவர் காதலும் அறிவித்தல்.

378. சுரும்பார் குவளை வயன்முது குன்றர் சுடர்க்கிரியில்
இரும்பார் வலியுடைத் திண்டோளின் மன்ன ரெதிர்ந்தவர்தம்
பெரும்பார் கொளுந்திறற் போர்பயி லுளும் பிணைவிழியாள்
அரும்பார் முலைநம் மடந்தையின் முன்வர லந்தியிலே. (கo)

---

உஅ. பரத்தையிற் பிரிவு.

காதலன் பிரிவுழிக் கண்டோர் புலவிக்கு
ஏது இஃதாம் அவ்விறைவிக் கென்றல்.

379. மலையிற் பெரும்புகழ் சேர்முது குன்றர் மணிவரையிற்
கலையுற் றவிர்விழி மானினஞ் சூழ்ந்தெனக் காவலரைச்
சிலையிற் பொருநுதல் வல்லியர் சூழ்தர றெரிந்திடின்மின்
நிலையிற் கலங்கிய வூடலைத் தாங்கி நெடிதுறுமே. (க)

தனித்துழி இறைவி துனித்தழு திரங்கல்.

380. புங்கம் பொருந்து மதில்சூழ் முதுகுன்றர் பொற்கிரியார்
சங்கங் கழன்றிட வெண்ணிறை கொண்டு தணந்ததற்பின்

376. பயணம் - பிரயாணம்; "விட்டவதி கைப்பதியி னின்றுபய ணம்பயணம் விட்டுவிளை யாடியபயன்" கலிங்கத்துப்பரணி. 287.

377. சேமன் - இடபம் நிலைபெற்ற. வீமன் புதல்வி - தமயந்தி. இல்லின் - வீட்டைப்போல

18694

அங்கங் குழைந்து மனந்தளர் வெய்த வருந்துயராற்
பங்கம் பொருந்தின ரென்போ லொருவரிப் பாரிலையே. (௨)

ஈங்கிது என்னெனப் பாங்கி வினாதல்.

381. மரியா திருந்திட வேண்டிய பேர்கண் மரித்தனரேற்
பரியா துடலருள் சீர்முது குன்றர் பனிவரையார்
தரியா துனது திருமனை வாயிலிற் சார்ந்திடவிற்
பிரியா திருந்தும் பிரிந்தாரிற் றுன்பென்கொல் பெய்வளையே. ()

இறையகன் புறத்தொழுக் கிறைமகள் உணர்த்தல்.

382. கலைமாது பாடும் புகழ்சேர் முதுகுன்றர் கார்வரையார்
கொலைமாது வாழுந் தமதிரு தோள்கள் கொடுத்திடுபொன்
விலைமாதர் தம்வச மாக்கிநம் மில்லினின் மேவிலரால்
அலைமாது போன்ற வணியுடை யாயெங்ங னாற்றுவனே. (௪)

தலைவியைப் பாங்கி கழறல்.

383. பலத்திற் கரிய பலமாகும் வீடு பயத்தலினால்
நிலத்திற் கரிய திருமுது குன்றர் நெடுவரையில்
நலத்திற் குரிய கொழுநனெவ் வாறு நடந்திடினும்
குலத்திற் பிறந்த குடிமாதர்க் காமோ குறைசொல்லலே. (௫)

தலைவி செவ்வணி அணிந்து சேடியை விடுப்புழி
அவ்வணி உழையர்கண் டழுங்கிக் கூறல்.

384. கொங்குணி வண்டு விழுகா முதுகுன்றர் கூர்சிலம்பிற்
செங்கனிக் கொவ்வை யிதழமு தேசெம் மலர்புனைந்து
பங்குனி மாதம் பலாசலர்ந் தென்னப் பழிக்குநர்முன்
இங்குநீ வந்த தலர்தழைப் பெய்தி யிருந்ததுவே. (௬)

---

380. புங்கம் - இடபம். சங்கம் - வளை. தணந்ததற்பின் - நீங்கியபின்.

381. மரியாது - இறவாமல். உடல் பரியாது அருள் என மாற்றி இயைத்துக்கொள்க; உடல் பரியாது அருள் - சரீரத்தைச்சுமக்காத வண்ணம் அருளுகின்ற.

382. கொலைமாது - துர்க்கை. அலைமாது - திருமகள்.
பி - ம் ‘எங்ஙனாற்றுவதே’

384. கொங்கு - தேனை. உனி=உன்னி - நினைத்து. பங்குனி மாதம் பலாசு அலர்ந்தென்ன: “பங்குனி மலர்ந்தொளிர் பலாசவன மொப்பார்” கம்ப. ஊர்தேடு. 70.



பரத்தையர் கண்டு பழித்தல்.

385. அவிர்கொன்றை வேணியர் சீர்முது குன்ற ரணிவரைமேற்
கவிரொன்று பூத்துக் கருஞ்சூற் புயற்றலை காட்டினபோல்
தவிர்கின்ற தின்பயற் காமப் பரத்தையர் சார்மறுகில்
நவில்செம் மலர்வேய்ந் திவள்வந் தனளிங்கு நாண்டுறந்தே. (௭)

பரத்தை உலகியல் நோக்கி விடுத்தலின்
தலைவன் வரவு கண்டு வந்து வாயில்கள் மொழிதல்.

386. பன்னகப் பூணணி நன்முது குன்றர் பனிவரைமேல்
மின்னலைக் கண்டிடு கேதகை பூநனை மேவுதல்போற்
கன்னலைக் கண்டைப் பழித்தசொன் மாதே கழறுமன்னர்
உன்னிலைக் கேகு மடவார்பின் வந்தா ருலகியற்கே. (௮)

தலைமகன் வரவு பாங்கி அரிவைக் குணர்த்தல்.

387. கறுப்பார் களஞ்சேர் முதுகுன்றர் வெற்பிற் கழறுநமை
வெறுப்பார் நமது திருமனை வாய்தலின் மேவினரேல்
மறுப்பார் மனம்விட் டவரெதிர் சென்று மனமகிழ்நீ
பொறுப்பார் தமக்குப் புகழல வோசொலும் பூங்கொடியே. ()

தலைவனைத் தலைவி எதிர்கொண்டு பணிதல்.

388. கணங்கட் கிறைவர் திருமுது குன்றர் கவின்சிலம்பீர்
மணங்கட் கிடமெனும் பூவீ ழளியென மங்கையர்பால்
இணங்கிப் பிரியுமை நெஞ்சத் திருத்தி யியம்புறும்யான்
வணங்கிப் பரவ வரவிட்ட பேரிங்கு வாழியவே. (௧0)

புணர்ச்சியின் மகிழ்தல்.

389. தொடுநீ ருலகந் தொழுமுது குன்றர் சுடர்க்கிரியில்
அடுநீ ரறுபான் மதுக்கலத் தாளு வளவுமின்பே

---

385. கவிர் - முள்ளுமுருங்கை. புயலென்றது கூந்தலை.

386. மின்னலைக் கண்டு தாழை மலர்தல்: 114 - ஆம் செய்யுளின் குறிப்பைப் பார்க்க.

387. மறுப்பு ஆர் - மறுத்தல் பொருந்திய. 407; பொறுப்பார் தமக்குப் புகழலவோ சொலும்: “ஒறுத்தார்க் கொருநாளை யின்பம் பொறுத்தார்க்குப், பொன்றுந் துணையும் புகழ்” (குறள்.) சொலும் - சொல்லப்படும்.

388. கணங்கட்கு - பூதகணங்களுக்கு. பூ வீழ் அளி - பூவில் விழுகின்ற வண்டு; “தோடு மன்னு சுரும்பென வீழவே” வி - பா: சம்பவச்.

வடுநீர்மை கொள்விழி மங்கைநல் லாடரு மாறிவின்பம்
படுநீர்மை யாலங்க மெல்லாங் களித்துப் பயன்பெற்றதே.(கக)

வெள்ளணி அணிந்து விடுத்துழித்
தலைமகன் வாயில் வேண்டல்.

390. காமடுச் சூழுந் திருமுது குன்றர் கவின்சிலம்பில்
மாமலர்த் தென்ன வெளுப்பணி பூண்டு வருமடவாய்
பாமுக நீங்கித் தலைவிதன் னூடலைப் பண்படுப்பாய்
இராவரும் வேள்கணை யென்மேற் பொருந்து மிடாறவே.(கஉ)

தலைவி நெய்யாடியது இகுளை சாற்றல்.

391. சுதையுற் றெழுந்த மதின்முது குன்றர் சுடர்க்கிரியில்
உதையத் தெழுந்த விளங்கதிர் போல வொருமகனை
சிதைவற்ற செல்வத் திறைவா வுயிர்த்துத் திருமனையில்
வதிவுற்று நெய்யாடி னுன்மேனி யெங்கள் வரிவிழியே. (கங)

தலைமகன் தன்மனத்து உவகை கூர்தல்.

392. தஞ்சங் கலந்த விமையவர்க் காகத் தனியருளால்
நஞ்சங் கலந்த களமுது குன்றர் நவில்சிலம்பிற்
கஞ்சங் கலந்தபொன் போல்பவள் பெற்றநங் காதலனை
நெஞ்சங் கலந்த மகிழ்வொடு காண்பதெந் நேரமதே. (கச)

தலைவிக்கு அவன் வரல் பாங்கி உணர்த்தல்.

393. பொதுவி னடம்புரி நம்முது குன்றர் பொருப்பிடத்தில்
இதுவி னமதென வெண்ணுமற் போன விறைவரின்று
விதுவில் விளங்குஞ் சிறுவனைக் காண விருப்படைந்து
மதுவில் விருப்புறு வண்டென வாய்தன்முன் வந்தனரே.(கரு)

---

389. தொடுநீர் - சகரரால் தோண்டப்பட்ட கடல்; பால் மதுக்கலந் தால் நாவளவும் இன்பே. நீர்மை - மாவடுவின் தன்மையை.

390. மடு - புண்ணிய மடு.

391. சுதையுற் றெழுந்த மதில்; சுதை - சுண்ணச்சாந்து; "மஞ்சூட்டி யன்ன சுதைமதில்" (தஞ்சை. 141.) உதையத்.........உயிர்த்து: "பொரு கடற் பருதி போலப் பொன்னனுன் பிறந்த போழ்தே" சீவக.

392. கஞ்சங் கலந்தபொன் - திருமகள்; கஞ்சம் - தாமரைமலர். வெண் கலம், பொன்னென்னும் உலோகப்பெயர்களும் இதில் தொனிக்கின்றன.

393. இது நமது இல் என. விதுவில் - பிறைச்சந்திரனைப்போல; "மாகம் மீன்ற மாமதி யன்னான் வளர்கின்றான்" சீவக.



தலைவி உணர்ந்து தலைவனோடு புலத்தல்.

394. மின்மேனி கொள்ளுந் திருமுது குன்றர் வியன்சிலம்பில்
நன்மேனி குன்றி மடவா ரிடைமுக நாணிநின்ற
என்மேனி மைந்தனைப் பெற்றமுக் குற்ற வெனைத்தொடினின்
பொன்மேனி மாசுறுங் காலையி னீர்போம் பொருந்திடத்தே.()

தலைமகள் பாணனை வாயில் மறுத்தல்.

395. மடுவால் வளையூர் வயன்முது குன்றர் மணிவரைமேற்
படுகூவல் வீழ்பொரு டாங்கொள நீர்நிலை பார்க்குநர்போல்
நெடுவே லிறைவர் நினையென் கருத்தி னினைவறிய
விடுதூத னுக்கினர் பொய்ப்பாண வென்முன மேவலையே. ()

வாயில் மறுக்கப்பட்ட பாணன் கூறல்.

396. செய்யால் விளங்குந் திருமுது குன்றர் சிலம்பின்மன்னர்
நெய்யால் விளங்குறு மெய்பெரு மாட்டி நினக்குரைத்த
பொய்யால்விளங்குமொழிகூறிவாவெனப்போந்தவென்கண்
கையா லெறிந்தது கல்லல்ல நின்மலர்க் கண்ணருளே. (கஅ)

விறலி வாயில் மறுத்தல்.

397. தூயர் மனங்கொளு நம்முது குன்றர் சுடர்க்கிரியிற்
காய மெலிந்து மனநொந்த வென்கண் கருணையிலார்
வாயன் மருவின ரென்றோது பாணர் மடமகளே
தேயர் நகைப்ப ரெனதுமுன் னேநீ செறியலையே. (ககூ)

விருந்தோடு வந்துழித்
தலைமகள் பொறுத்தல் கண்டு
தலைமகன் மகிழ்தல்.

398. தீராத பாவந் தீருமுது குன்றரைச் சேர்ந்தவர்பால்
வாரா தெனவே மலர்வார் குழலி மனப்பிணக்குச்
சீரார் விருந்து வரவெதிர் கண்டதுந் தீர்ந்ததுகாண்
ஏரார் பெரியரைக் காணி லிகத்திலு மின்பமுண்டே. (உ0)

---

394. மின் - உமாதேவியாரை. நன்மேனி - நல்லநிறம். எல் மேனி - விளக்கத்தையுடைய மேனி.

395. கூவல் - கிணற்றில்.

விருந்துகண் டொளித்த ஊடல் வெளிப்பட நோக்கிச்
சீறே லென்றவள் சீறடி தொழுதல்.

399. புகழ்வாரைப் புங்கவ ராக்கு முதுகுன்றர் பூஞ்சிலம்பில்
திகழ்வார் கருங்குழற் றேனே மனச்சினந் தீர்ந்திடுவாய்
அகழ்வாரைத் தாங்கு நிலம்போலத் தம்மை யடைதலில்லா
திகழ்வாரைத் தாங்க னலந்தமிழ் வேத மிசைத்ததுவே. (உக)

இஃது எங்கையர் காணின் நன்றன்றென்றல்.

400. கண்ணான் பரவுந் திருமுது குன்றர் கவின்சிலம்பா
எண்ணாந் தவிர்த்தெனை யேந்திழை யார்முன மிங்குறுநீ
உண்ணெஞ்ந்த வென்னடி வீழ்ந்தே முகம னுரைத்தனையால்
நண்ணுந் திறமிதை யெங்கையர் காண்குறி னன்றலவே.(உஉ)

அங்கவர் யாரையும் அறியே னென்றல்.

401. இந்திரற் கஞ்சாத் திருமுது குன்ற ரெழில்வரையிற்
சந்திரற் கொத்த திருமுகத் தாய்நினைச் சார்ந்ததற்பின்
ஐந்தரு நீழ லரம்பைய ரேனு மகநினையேன்
சிந்தையில் வேறு நினையா தொழிதல் சிறப்புடைத்தே. (உங)

தலைமகள் காமக் கிழத்தியைக் கண்டமை பகர்தல்.

402. காசி சுடலை யெனமுது குன்றுறு கண்ணுதலோன்
மாசி மகநம் மறுகிடைத் தேரிலென் மைந்தனைக்காண்
தாசி யொருத்தி தழுவ நினக்குறு தங்கையென்றூர்
கூசி மணையிற் புகுந்தேன் மகளிர் குழுவகன்றே. (உச)

---

399. புங்கவர் - தேவர். தமிழ்வேதம் - திருக்குறள். அகழ்வாரை...... இசைத்ததுவே: "அகழ்வாரைத் தாங்கு நிலம்போலத் தம்மை, இகழ்வார்ப் பொறுத்தல் தலை" குறள்.

400. எங்கையர் - என் தங்கையார்; என்றது பரத்தையரை.

401. இந்திரற்கு அஞ்சாத் திருமுதுகுன்றர் - இந்திரன் மலைகளின் சிறகரிந்த கதையை உட்கொண்டு இங்ஙனம் கூறினர்; "புரந்தர னஞ்சு பழமலை வாணன்" பழமலையந்தாதி, 42.

402. மாசி மகம், இத்தலத்தில் பிரம்மோத்ஸவத்திற்குரிய நாள்.



தலைமகளைப் பாங்கி புலவி தணித்தல்.

403. வெள்ளிக் கிரியை வெறுத்த முதுகுன்றர் வெற்பிடத்தில்
எள்ளிற் பழுதாம் பதம்வீழ் கணவனை யேந்திழையாய்
வள்ளிக் குருகித் திரிந்துபின் கொள்குகன் வந்தபின்னர்
தள்ளிச் சினமுற் றனளோ புரந்தரன் றன்மகளே. (உரு)

தலைவி தணியாளாகத் தலைமக னூடல்.

404. கடலைக் குடித்த முனிதாழ் முதுகுன்றர் கார்வரைமேல்
அடலைக் குறித்த வயில்விழி மங்கை யகனெடுவான்
தொடலைக் குறித்த மலைச்சாரல் வந்திடு தோகையல்லள்
உடலைக் குறித்த வருநதுயர் நெஞ்சே யுறுவதென்னே. (உசு)

பாங்கி யன்பிலை கொடியை யென்று
இணர்த்தார் மார்பனை இகழ்தல்.

405. வான்சேர் பொழில்சூழ் திருமுது குன்றர் மணிவரைமேல்
வான்சேரும் பூச்செண் பகமல ரென்ன மதித்தனைமுன்
கான்சேர் குழலியை யிப்போது நீளுங் கவிர்மலரா
ஊனசே ரயிலுடை நீள்கர மன்னவ வுன்னினையே. (உஎ)

மகனும் ஆற்றுமையும் வாயிலாகத்
தலைமகன் வந்துழித் தலைமகள் எதிர்கோடல்.

406. வானம் பொருந்தும் புகழ்முது குன்றர் மணிவரைமேல்
மானம் பொருந்தும் பெரியோர் சிறிய மடமையர்பால்
ஊனம் பொருந்த வருகுவ ரோவதை யுன்னலராய்க்
கானம் பொருந்திய பூந்தார்ப் புயமுடைக் காவலனே. (உஅ)

தலைமகன் புணர்ந்து நீங்கியபின் வந்த
பாங்கியோடு தலைவி தன்மகனைப் புகழ்தல்.

407. கறுத்தே விளங்குங் களமுது குன்றர் கனகவெற்பில்
வெறுத்தே நமது மனையைக் கடந்தவர் வேண்டிநம்மிற்
குறித்தே யடைந்திடத் தோன்றிடு சேயாற் குறையனைத்தும்
பொறுத்தே யிருந்திடு நாம்புகழ் பெற்றனம் பூங்கொடியே. ()

---

403. எள்ளின் - இகழ்ந்தால். பதம் வீழ் - காலில் வீழ்ந்த. குகன் - முருகக் கடவுள். புரந்தரன் மகள் - தெய்வயானை.

405. கவிர் மலரா உன்னினை யெனக் கூட்டுக.

பி - ம். 'மான்சேரும் பூச்'

406. உன்னலராய் வருகுவரோ என இயைக்க.

### தலைவி தலைவனைப் புகழ்தல்.

408. எந்தெழின் மங்கை யிடமுது குன்ற ரிருஞ்சிலம்பர்
பூந்துணர்ச் சோலையிற் கண்டவ னாளன்பு போக்கிலராய்
மாந்தளிர் மேனி யழுதே யுலகில் வனிதையர்க்குக்
காந்தனைப் போல வுறவிலை யென்பது காட்டினரே. (௫0)

### பாங்கி தலைவியைப் புகழ்தல்.

409. நலத்திற் சிறந்த முதுகுன்றர் வெற்பிடை நம்மிறைவி
நிலத்திற் கிடந்தமை கால்காட்டு மென்னு நிகழ்மொழிபோல்
வலத்திற் சிறந்த மகிழ்நர்செய் குற்ற மனம்பொறுத்தே
குலத்திற்பிறந்தகுடி காட்டிக்கற்பினைக்கொண்டனளே. (௫௧)

---

## ௨௯. ஓதற் பிரிவு.

### கல்விக்குப் பிரிவு தலைமகனு ணர்ந்த தோழி தலைமகட்கு உணர்த்தல்.

410. இறைவிக் கொருதுணை யாமுது குன்ற ரெழிற்சிலம்பர்
துறவிக் கருந்துணை போற் வாகச் சொலுமதுதான்
மறவிக் கிகலுறு கல்வியி னல்வரு மற்றதனைப்
பிறவிப் பயன்பெறக் கற்றிடப் போயினர் பெய்வளையே. (௧)

### தலைமகள் கார்ப்பருவங் கண்டு வருந்தல்.

411. வணர்வார் குழலா ளிடமுது குன்றர் மணிவரையார்
உணர்வார் பெருங்கல்வி கற்றிடப் போயின ருன்னிலராற்
புணர்வார் முலையாய் கடன்மேய்ந்த கொண்டற் பொலிகுரலைப்
பணர்வார் பொழிலகங் கேட்டன னுள்ளம் பதைத்திடவே.()

---

408. பூந்துணர்.........போக்கிலராய்: "மகிழ்நர் முன்னுள், உண்டா கியபழங் கேண்மையிந் நாளு மொழிந்திலரே" (தஞ்சை. 406.) வனிதை யர்க்கு......காட்டினரே: "கொண்டானிற் றுன்னிய கேளிர் பிறரில்லை" (நான்மணிக். 56); "கொண்டானிற் றுன்னிய கேளிர்மற் றில்லை குறிப் பினென்று, தண்டா தவர்சொன்ன சால்புகண்டேன்" (தஞ்சை.406.)

409. கால் - முளை: நிலத்திற்.........மொழி: "நிலத்திற் கிடந்தமை கால்காட்டுங் காட்டும், குலத்திற் பிறந்தார்வாய்ச் சொல்" குறள்.

411. பணர் - மரக்கிளை.



(இ - ள்.) உத்தம குணத்தாய் - உத்தமமான குணத்தை யுடையவளே, ஞானம் ஒழுங்கு எனும் இரண்டினால் - ஞானமும் ஞானசாரமு மென்னும் இரண்டினாலும், மெய்த்தவர் - ஞானநெறிநிற்பவர்கள், முத்தி எய்தும் விதியினை விரித்து உரைப்பன் - முத்தியை அடையும் முறைமையினை விரித்துக் கூறுகின்றேன், இத்திறம் உரைத்தகாலை - இவ்வாறு கூறிய பொழுது, இதனினால் விளங்காதாருக்கு - இவ்வுறுதி மொழியால் (முத்தியை அடையும் முறை) விளங்காதவர்க்கு, எத்தனை அனந்தகோடி நூலினும் இனி விளங்கா - எவ்விதமான பலநூல்களாலும் இனி விளங்கமாட்டாது எ - று.

(பொ - ரை.) உத்தமமான குணத்தையுடையவளே! ஞானமும் ஞானசாரமு மென்னும் இரண்டினாலும் ஞானநெறி நிற்பவர்கள் முத்தியை அடையும் முறைமையினை விரித்துக் கூறுகின்றேன். இவ்வாறு கூறிய பொழுது இவ்வுறுதி மொழியால் முத்தியை அடையும் முறை விளங்காதவர்க்கு எவ்விதமான பல நூல்களாலும் இனி விளங்கமாட்டாது எ - று.

(க - ரை.) ஞானம் ஞானசார மென்னும் இரண்டினாலும் ஞானநெறி நிற்பவர் முத்தியடைவர் என்பதாம்.

குணம், சித்குணம் சடகுணம் என இரு வகைப்படும். சித்குண மென்பது, சித்துப்பொருளாகிய உயிரின் குணமும், இறைவன் குணமு மென இருவகைப்படும். சடகுண மென்பது, சடப்பொருளாகிய மாயையின் குணம். இந்தச் சடகுணம், சாத்துவிகம், இராசதம், தாமதம் என முத்திறப்படும். இம்மூன்று குணங்களும் உயிருக்குச் சடப்பொருளோடு கூடிப்பிரிதலாகிய பிறப்பிறப்புக்களைச் செய்யுமாதலின், இம்மூன்றனுள் இராசத தாமதங்கள் அதமமும், சாத்துவிகம் மத்திமமு மெனப்படும். ஏனைய சித்துக் குணம் இரண்டனுள், உயிரின் குணமானது இறைவன் குணத்தையாவது மாயையின் குணத்தையாவது சார்ந்து நின்று தொழிற்படு மல்லது தனித்து நின்று தொழிற்படுமா றில்லை. இறைவன் குண மென்பது அருளேயாம். அருளென்பது சத்தியேயாம். சத்தியாகிய உமாதேவியார் உயிர்களைப் பிறப்பிறப்புக்களினின்று நீக்கிச் சிவபெருமானோடு இரண்டறக்கலந்து நிற்கச் செய்தல்பற்றி, 'உத்தம குணத்தாய்' என்று அழைக்கப் பட்டனர்.

மெய்த்தவர் - ஞானி. தவம், பொய்த்தவம் மெய்த்தவம் என இருவகைப்படும். பொய்த்தவம், கடவுளல்லாதாரைக் கடவுளெனக் கருதிச் செய்யும் வேள்விமுதலியன. இவை, தத்தமக்குரிய சுவர்க்காதி பலன்களைத் தந்து கெட்டொழிதல் பற்றியும் பொய்த்தவ மெனப்பட்டன. மெய்த்தவம், சிவபெருமானைக் கடவுளெனக் கருதிச் செய்யும் சரியை முதலியன. சரியை சாலோகத்தைத் தந்து கிரியைக்கு வித்தாயும், கிரியை சாமீபத்தைத்

தந்து யோகத்திற்கு வித்தாயும், யோகம் சாரூபத்தைத் தந்து ஞானத்திற்குவித்தாயும், ஞானம் முத்திக்குவித்தாயும் ஆகின்றன. மெய்த்தெய்வமாகிய சிவபெருமானை நோக்கிய வழிபாடாதல் பற்றியும், தத்தம் பலனைத் தந்து அழிதலின்றி மேலைக்கு வித்தாதல் பற்றியும், சரியை முதலிய நான்கும் அரும்பு மலர் காய் கனி போல் உவமிக்கப்பட்டு மெய்த்தவம் எனப்பட்டன. எனினும், தனக்கு மேலொன் றில்லாத ஞானமே மெய்த்தவமெனச் சிறப்பித்துக் கூறப்படும்.

சரியை முதலியன தத்தம் பலனைத்தந்து அழியாமைபற்றி இவற்றை இறப்பில் தவம் எனச் சிவஞானபோதம் கூறிற்று (அ - சூ - ம், க - அதி). ஞானம் மெய்த்தவமெனச் சிறப்பித்துக் கூறப்படுமென்னுங் கருத்துப்பற்றியே, ஞானியைப் 'பாணுணர்வி னலுணரும் மெய்த்தவர்'' எனச் சிவஞானபோதம் கூறிற்று (கஉ - சூ - ம், உ - அதி). இவ்வாறு கூறியமுறையில் மெய்த்தவர் ஞானநெறியில் நிற்பவராவரென்பது இனிது விளங்கினமை காண்க. முத்தி யெய்தும் என்பதனைச் சாரவைத்தோதியதனாலும், மெய்த்தவர் என்னுஞ் சொல்லிற்கு ஞானநெறியுடையாரே பொருளென்பது கடைப்பிடிக்க. இரண்டினுமே என்றவிடத்து ஏகாரம் அசை. உம்மைதொக்குநின்றது. விளங்காது என்னும் பொருள்பட துவ்விகுதி ஈற்றில் தொக்கு நின்றது. (உ)

(அ - கை.) ஞானத்தைப் பெறுதற்குரிய அதிகாரி யிலக்கணங் கூறுகின்றார்.

3. ஆசைபய மையமகங் காரமுயிர்க் கச்சமின்றிப்
பாசம்விடல் கருணையுட னொருமைபத்தி ஞானமுத்திக்
காசைமிக வுடையரா யோகதற் பாருமாகிப்
பேசியகா லோத்தரத்தின் வழிநிற்பர் பெரியர்தாமே.

(இ - ள்.) ஆசை (இன்றி) - பிறருடைய பொருளில் ஆசையின்றியும், பயம் (இன்றி) - அச்சமின்றியும், ஐயம் (இன்றி) - சந்தேகமின்றியும், அகங்காரம் (இன்றி) - அகங்காரமின்றியும், உயிர்க்கு அச்சம் இன்றி - உயிர்கட்கு அச்சம் தரத்தக்க செயலின்றியும், பாசம் விடல் - உடலினிடத்தும் உடற்சார்பான உறவினர் முதலியோரிடத்தும் பற்றைவிட்டு, கருணையுடன் - அன்னவரிடத்தும் ஏனையோரிடத்தும் கடமையாகக் கருணையுடன், ஒருமை - விடப்பட்ட பொருள்களை மீளப்பற்றாத ஒருமைப்பாடும், பத்தி - இறைவனிடத்து இடையறாத பத்தியும், ஞானம் - இறைவனைவிட்டுப் பிரியாதிருக்கும் தன்னுண்மையினை ஆராயும் ஞானமும், முத்திக்கு ஆசை - முத்தியின்கண் ஆசையும், மிக உடையராய் - எப்பொழுது முடையராகி, யோக தற்பாரும் ஆகி - யோக ஒழுக்கமும் உடையவராய், காலோத்தரத்



தின் பேசிய வழிநிற்பர் பெரியர் - இந்தத் தேவிகாலோத்தரத்திற் கூறப்பட்ட ஞானநெறியில் ஒழுகுவோர் பெரியராவர் எ - று.

(பொ - ரை.) பிறருடைய பொருளில் ஆசையின்றியும், அச்சமின்றியும், சந்தேகமின்றியும், அகங்காரமின்றியும், உயிர்கட்கு அச்சந் தரத்தக்க செயலின்றியும், உடலினிடத்தும் உடற்சார்பான உறவினர் முதலியோரிடத்தும் பற்றைவிட்டு, அன்னவரிடத்தும் ஏனையோரிடத்தும் கடமையாகக் கருணையுடன், விடப்பட்ட பொருள்களை மீளப்பற்றாத ஒருமைப்பாடும், இறைவனிடத்து இடையறாத பத்தியும், இறைவனைவிட்டுப் பிரியாதிருக்குந் தன் உண்மையினை ஆராயும் ஞானமும், முத்தியின்கண் ஆசையும் எப்பொழுது முடையராகி, யோக வொழுக்கமும் உடையவராய், இந்தத் தேவிகாலோத்தரத்திற் கூறப்பட்ட ஞானநெறியில் ஒழுகுவோர் பெரியராவர் எ - று.

(கு - ரை.) உலகப்பற்றைவிட்டு உயிர்களிடத்துக் கருணையும், யோக வொழுக்கமும் உடையவரே ஞானாதிகாரியாவர் என்பதாம்.

காலோத்தரம் - உயிர்களுடைய பக்குவகாலத்தில் உபதேசிக்கத்தக்க முடிவான ஞானமும் ஞானாசாரமும். இவை தேவிக்கு உபதேசிக்கப்பட்டமையால் தேவிகாலோத்தரம் என்பது இந்நூற்குப் பெயராயிற்று.

பிறர்பொருளில் ஆசைவைத்தால், பொருளுடையான் அறியின் துன்புறுத்துவானென்னும் அச்சம் உண்டாம். அச்சம் உண்டாகவே, எவ்வித துன்பத்தைச் செய்வானோவென்னும் ஐயம் நிகழும். ஐயம் நிகழவே, பொருளுடையானைக் கெடுத்துவிட வேண்டுமென்னும் அகங்காரம் உண்டாம். அகங்காரம் உண்டாகவே, உயிர்கள் அஞ்சத்தக்க செயல் நிகழும். இச்செயலுடையார்க்கு உயிர்ப்பற்றும் உடற்பற்றும் நீங்குமாறில்லை. ஆகவே, பற்றுவிடுதற்கு மேற்கூறப்பட்ட அனைத்தும் நீங்கவேண்டுமென்பது தோன்ற, 'ஆசைபயம் ஐயமகங் காரமுயிர்க் கச்சமின்றிப், பாசம்விடல்' எனவும், தனக்கொரு பயன் கருதி வைக்கப்படும் பற்றுத்தான் பாசமெனப்படும்; எவ்வுயிரிடத்தும் இறைவன் உள்ளீடாய் நிற்றலால் இறைவனைப் பேணுதல் போல உயிர்களைப் பேணுதல் கடமையாமெனக் கருதிக் காத்தல் பாசமாகாதென்பது தோன்ற 'கருணையுடன்' எனவுங் கூறினார். தொடர்பிலாது வைக்கும் பற்றென்பது அறிவித்தற்குக் 'கருணை' யென்னும் மொழியை உபயோகித்தமை கவனிக்கத்தக்கது.

இவ்வாறு பற்றுவிட்டுக் கருணையுடையனா யிருப்பினும், விடுதலை நிலையாத விடத்துப் பயனில்லை; அது நிலைத்தவிடத்தும் இறைவனிடத்துப் பத்தியில்லையாயிற் பயனில்லை; பத்தியிருந்தும் அநுபவ ஞானத்திற் கேதுவாகிய ஆராய்ச்சிஞான மில்லையாயின் எடுத்த பிறப்பில் பரமுத்தி யடைத

வில்லை; ஆராய்ச்சி ஞான மிருப்பினும், உண்மைமுத்தியில் ஆசையில்லையா யின், அவ்வாராய்ச்சி தன்னைக் கல்வியுடையானெனக் காட்டுதற்கும், பிற ரோடு சொற்போர் புரிதற்கும் உபயோக மாகுமன்றி, அநுபவத்தை உண்டு பண்ணுதலில்லை. முத்தியின்கண் ஆசையிருப்பினும், யோகநெறியில் ஒழு கினாலல்லது அது கைகூடுமாறில்லை. ஆகலின், யோகநெறி நின்றோரே ஞா னத்திற் கதிகாரியாவர். இக்கருத்துக்கள் தோன்ற முறைப்படுத்தி ஒன்றன் பின் ஒன்றாக வாக்கியங்களை வைத்துக் கூறினமை காண்க.

முத்தி வேண்டா மென்பா ரெவரு மில்லை. ஆகையால், அனைவரும் முத்திக்கு அதிகாரி யாவரோ எனின், ஆகார். ஆசை, யாதானுமோர் சமயத் தில் நிகழ்வதும், எப்பொழுதும் நிகழ்வதுமென இருதிறப்படும். எப்பொழு தும் நிகழும் ஆசைதான் ஆசைப்படும் பொருளை யடைதற்குரிய அதிகாரித் தன்மையை உண்டுபண்ணும். ஆகலின், 'முத்திக்காசை மிகவுடையாராய்' என்றார். எனினும், ஒருமை பத்தி ஞானம் என்னும் மூன்றும் அவ்வாறே எப்பொழுதும் உடையராயிருத்தல் வேண்டுமென்பது கருத்தாகக் கொள் ளல்வேண்டும். அவ்வாறே கொண்டு உரை கூறினோம்.

இன்றி யென்பது ஆசை முதலிய ஒவ்வொன்றினும் சென்று பொருந் தும்.

கருணையுடன் என்றவிடத்துள்ள உடன் என்னும் எண்ணுருபு, யோ கதற்பரும் என்ற எண்ணும்மையோடு கூட்டி யெண்ணப்படும். தற்பரம் என்பது தது - பரம் எனப்பிரியும். தது - அதில், பரம் - மிக்க ஆசை. யோ கதற்பரர் - யோகத்தில் மிக்க ஆசையுடையவர். காமே என்பது ஆசை. (௩)

(அ - கை.) ஞானாதிகாரியின் பெருமையைக் கூறுகின்றார்.

4. வாயுவென மறுகுகின்ற மனமடங்கும் வகைதடுப்பான்
ஆயவவ னரிபிரம னிந்திரன்சண் முகன்குருவும்
ஏயபல தேவதைகள் யோகிதபோ தனனறிஞன்
ஆயினெல்லா முடையானு மவனணங்கு நுணங்கிடையாய்.

(இ - ள்.) அணங்கு நுணங்கு இடையாய் - (தனபாரத்தால்) வாடும் நுண்ணிய இடையை யுடையவளே!, வாயு என மறுகுகின்ற மனம் அடங் கும் வகை தடுப்பான் ஆய அவன் - காற்றைப்போலச் சலிக்கும் மனத்தைச் சலியாது ஒருவழிப்படும் வண்ணம் தடுப்பவனாகிய அவன், அரி பிரமன் இந்திரன் சண்முகன் குருவும் - விட்டுணுவும் பிரமனும் இந்திரனும் சண் முகனும் குருவும், ஏய பலதேவதைகள் யோகி தபோதனன் அறிஞன் - பொ ருந்திய பலதேவதைகளும் யோகியும் தவத்தை நிதியாக வுடையவனும் அறி வுடையனு மாவன், ஆயின் எல்லாம் உடையானும் அவன் - ஆராயுமிடத்து எல்லாவற்றையும் உடையவனும் அவனே எ - று.



(பொ - ரை.) தனபாரத்தால் வாடும் நுண்ணிய இடையை உடையவ ளே! காற்றைப் போலச் சலிக்கும் மனத்தைச் சலியாது ஒருவழிப்படும் வண்ணம் தடுப்பவனாகிய அவன், விட்டுணுவும் பிரமனும் இந்திரனும் சண் முகனும் குருவும் பொருந்திய பலதேவதைகளும் யோகியும் தவத்தை நிதி யாக வுடையவனும் அறிவுடையனுமாவன். ஆராயுமிடத்து எல்லாவற்றை யும் உடையவனும் அவனே எ - று.

(க - ரை.) மனத்தை ஒருவழிப்பட அடக்க வல்லவன் அறிவுடையவ னும் எல்லாவற்றையும் உடையவனு மாவன் என்பதாம்.

அகரச்சுட்டு மேலைச்செய்யுளிற் கூறப்பட்ட பெரியாரைச் சுட்டிற்று. ஆவன் என்பது சொல்லெச்சம். குருவும் என்றவிடத்துள்ள உம்மை எல் லாவிடத்துஞ் சென்று பொருந்தும்.

மனத்தை அடக்கின் தெய்வம் விளங்கித் தோன்றும்; தெய்வத்தன் மையுண்டாம். மனத்தை அடக்குதல்தான் யோகம். அதுதான் தவம். மனத் தை அடக்குபவன் உண்மை ஞானத்தைப் பெறுதற்குரியனாதலின், அவ னே அறிவுடையானெனச் சிறப்பித்துக் கூறப்படுவன். அவனே எல்லாம் உடையன். இக்கருத்துக்கள் தோன்ற வாக்கியங்கள் முறையாக வைக்கப் பட்டமை காண்க. "அறிவுடையா ரெல்லா முடையார் அறிவிலார், என்னு டைய ரேனு மிலர்" என்பது திருக்குறள். (அறிவுடைமை. செ. ௧௦.) (௪)

(அ - கை.) மனத்தின் அடக்கமே முத்திநெறி யெனக் கூறுகின்றார்.

5. அறிவுநிலை தவமடக்கம் புண்ணியந்தியா னங்குணங்கள்
நெறியுடைய முத்திநெறி முத்தியுபா யந்நினைக்கின்
மறுகும்வளி யனையமன மடங்குவதொன் றியாததுவே
அறிவுடையோ ரிவையனைத்து மாமென்றே யறைகுவரால்.

(இ - ள்.) மறுகும் வளி அனைய மனம் அடங்குவது ஒன்று யாது அது வே - சலிக்கும் வாயுவை யொத்த மனத்தை அடக்குவதாகிய ஒப்பற்றது யாதோ அதுவே, நினைக்கின் - ஆராயுமிடத்து, அறிவு நிலை தவம் அடக்கம் புண்ணியம் தியானம் குணங்கள் நெறியுடைய முத்திநெறி முத்தி உபா யம் - மெய்யறிவும், அவ்வறிவால் அறிந்தவற்றில் உறுதிப்பாடும், பரம்பொ ருளைச் சிந்திக்குந் தவமும், பொறிகள் புலன்களிற் செல்லாத அடக்கமும், சிவபுண்ணியமும், சிவத்தியானமும், சாந்தம் முதலிய நற்குணங்களும், நே ரான முத்திநெறியும், உண்மை முத்தியை அடையச் செய்யும் சாதனமும், ஆம் இவை யனைத்தும் என்று அறிவுடையோர் அறைகுவர் - ஆகிய இவை யனைத்து மென்று அறிவுடையோர் கூறுவர் எ - று.

(பொ - ரை.) சலிக்கும் வாயுவை யொத்த மனத்தை அடக்குவதாகிய ஒப்பற்றது யாதோ அதுவே, ஆராயுமிடத்து மெய்யறிவும், அவ்வறிவால்

அறிந்தவற்றில் உறுதிப்பாடும், பரம்பொருளைச் சிந்திக்குந்தவமும், பொறிகள் புலன்களிற் செல்லாத அடக்கமும், சிவபுண்ணியமும், சிவத்தியானமும், சாந்தம் முதலிய நற்குணங்களும், நேரான முத்திநெறியும், உண்மைமுத்தியை அடையச்செய்யுஞ் சாதனமும் ஆகிய இவையனைத்துமென்று அறிவுடையோர் கூறுவர் எ - று.

(க - ரை.) மனத்தினடக்கமே முத்திநெறி முதலிய அனைத்தும் என்பதாம்.

மனம் என்பது சித்தரூபமாய் இஃது ஒன்று தோன்றுகின்றது என்றெண்ணும் சங்கற்பத்தையும், இதுவோ அதுவோ வென்றையுறும் விகற்பத்தையுஞ் செய்யுங் கருவி. எனவே, ஆன்மாவினறிவு சங்கற்பவிகற்பங்களைச் செய்வதற்கு மனங்கருவியாகும் என்பது பெறப்படும். படவே, மனம் அடங்கவேண்டுமாயின், ஆன்மாவினறிவு மனத்தோடு கூடாதிருக்கவேண்டும். ஆன்மாவினறிவோ யாதானும் ஒன்றைச் சார்ந்தன்றி நிற்கும் இயல்பினையுடையது. ஆகலான், ஆன்மாவினறிவு பரம்பொருளைச் சிந்திக்குந் தவத்தினைப் பயிலுதலே மன அடக்கமாகும். இக்கருத்துத் தோன்ற அறிவு முதலியவற்றை முன்னர்க்கூறி, மனத்தினடக்கத்தைப் பின்னர்க் கூறினார். எ, ஆல் இரண்டும் அசை. (௫)

(அ - கை.) மனம் அடங்காமையே பந்தத்தைச் செய்யுமாதலின், முத்தியை அடையவிரும்புவோன் மனத்தை அடக்கவேண்டுமெனக் கூறுகின்றார்.

6\. கருத்தடங்கின் முத்தியது கையகலிற் கட்டாகும்
விரித்தபொரு ளிதுவென்ன வறிவுடைய மேதக்கோர்
திருத்தகுநல் லறிவாலே சித்தத்தைத் திறம்பாமல்
அருத்தியுட னிலைநிறுத்து மஃதறிவின் பயனாமால்.

(இ - ள்.) கருத்து அடங்கின் முத்தி - மனம் (விடயங்களிற் செல்லாது தன்னிடத்து) அடங்குமாயின் அதுவே முத்தியாகும், அது கை யகலில் கட்டு ஆகும் - அந்தமனம் தன்னைவிட்டு நீங்கி விடயங்களிடத்துச் செல்லுமாயின் அதுவே பந்தமாகும், இது விரித்த பொருள் என்ன - இதுவே வேதாகமங்களால் விரித்துக் கூறப்பட்ட பொருளாகுமென்று கருதி, அறிவு உடைய மேதக்கோர் - மெய்யறிவுடைய பெரியோர்கள், திருத்தகு நல் அறிவால் - நின்மலமாயிருக்கின்ற நல்லறிவால், சித்தத்தை திறம்பாமல் - மனத்தைச் சலிக்கவொட்டாது, அருத்தியுடன் நிலைநிறுத்தும் அஃது அறிவின் பயன் ஆம் - ஆசையுடன் நிலைக்கச்செய்கின்ற அதுவே அறிவின் பயனாகிய ஆன்மலாபமாகும் எ - று.

(பொ - ரை.) மனம் விடயங்களிற் செல்லாது தன்னிடத்து அடங்குமாயின், அதுவே முத்தியாகும். அந்த மனம் தன்னைவிட்டு நீங்கி விடயங்க



ளிடத்துச் செல்லுமாயின், அதுவே பந்தமாகும். இதுவே, வேதாகமங்களால் விரித்துக் கூறப்பட்ட பொருளாகுமென்று கருதி மெய்யறிவுடைய பெரியோர்கள், நின்மலமாயிருக்கின்ற நல்லறிவால் மனத்தைச் சலிக்கவொட்டாது ஆசையுடன் நிலைக்கச் செய்கின்ற அதுவே அறிவின் பயனாகிய ஆன்மலாபமாகும் எ - று.

(க - ரை.) மனம் அடங்காமையே பந்தமாகும் என்பதாம்.

ஏ, ஆல், இரண்டும் அசை.

மனம் அடங்காமை பந்தத்திற் கேதுவாகு மென்பதைப் 'பந்தமாகும்' என்றார். மனம் அடங்கின் இந்திரியங்களின் அடக்கம் உண்டாகும். மனம் அடங்கவில்லையாயின் இந்திரியங்களின் அடக்கம் உண்டாகாது. இந்திரியங்களின் அடக்கம் இல்லையாயின், ஆன்மாவானது விடயங்களில் குரங்குபோல் தாவிச் செல்லும். இதுவே பந்தமாகும், ஆகையால், மன அடக்கமே முத்திக்கு ஏதுவாகு மென்பது பெறப்படும். இக்கருத்துத் தோன்ற 'கருத்தடங்கின் முத்தி அது கையகலிற் கட்டாகும்' என்றார்.

கை என்பது தன் என்னும் பொருள் குறித்தது. 'கைக்குவந்து விட்டதா?' என்னும் உலகவழக்கானும், 'கூற்றம் குதித்தலும் கைகூடும்' (திருக்குறள் செ - 269) என்னும் நூல்வழக்கானும், இதனை யறிந்து கொள்க.

மனம் அடங்கவேண்டுமாயின், மனத்தொடு கூடி நின்று அம்மனத்தைச் செலுத்தும் அறிவு பரம்பொருளைச் சார்ந்து நிற்றல்வேண்டும். மனத்தைச் சார்ந்து நிற்கும் அறிவு மலத்தொடு கூடிய தாகும். பரம்பொருளைச் சார்ந்துநிற்கும் அறிவு மலத்தொடு கூடாது திருத்தமுற்ற நல்லறிவாகும். இந்த அறிவால் மனம் அடக்குவதில் ஆசைவைத்து மனத்தை யடக்க முயன்றால் அஃது அடங்கும். இக்கருத்துத்தோன்ற, ''திருத்தகுநல் லறிவாலே சித்தத்தைத் திறம்பாமல், அருத்தியுடன் நிலைநிறுத்தும் அஃது அறிவின் பயன்' என்றார்.

மனமடங்குதல்தான் மக்கட்பிறப்பினு லாய பயன். ஆதலின், அஃது அறிவின்பய னெனப்பட்டது.

மன அடக்கத்தி னருமை தோன்ற 'சினமிறக்கக் கற்றாலுஞ் சித்தியெல்லாம் பெற்றாலும், மனமிறக்கக் கல்லார்க்கு வாயேன் பராபரமே' எனவும், 'சிந்தையை யடக்கியே சும்மா விருக்கின்ற திறமரிது' எனவும் தாயுமானசுவாமிக ளருளிச்செய்வாராயினர். (௬)

(அ - கை.) சிவபெருமானிடத்துச் செலுத்தும் அன்பே மேலான இன்பத்தைத் தருமெனக் கூறுகின்றார்.

7\. ஒருபொரு ளொக்கா லத்து முனதாகச் சிறப்பு டைத்தாய்
இருவினை யின்றி மேலா மின்பத்தை யளிப்ப தாகும்

*பொருவிலா விதன்மே லன்பு பொருந்திடா தாரு முண்டே*
*திருவுலா வகன்ற கல்விச் சிறந்தசான் றோர்க டாமே.*

(இ - ள்.) ஒருபொருள் - (தலைமைத்தன்மை பிறரொருவருக்கு மின்றித் தனக்கே உடைய) சிவபரம்பொருள், எக்காலத்தும் உளதாகி - செல்காலம் நிகழ்காலம் எதிர்காலமென்னும் மூன்றுகாலத்தும் (ஒருதன்மையாய்) நிலைத்திருப்பதாய், சிறப்பு உடைத்தாய் - (அநாதியே மலமில்லாத) சிறப்பினை உடையதாய், இருவினை இன்றி - நல்வினை தீவினையென்னும் இருவினைகளில்லாது, மேலாம் இன்பத்தை அளிப்பது ஆகும் - (மாயாகாரியங்களாலுண்டாகும் இன்பத்திற்கு) மேலான பேரின்பத்தைத் தரும், திருவுலா அகன்ற கல்விச் சிறந்தசான்றோர்கள் - தெய்வத்தன்மை விளங்கும் பெருமைவாய்ந்த கல்வியினால் மேம்பட்டு விளங்கும் அறிவுடையோர்களுள், பொரு இலா இதன்மேல் அன்புபொருந்திடாதாரும் உண்டே - ஒப்பில்லாத இந்தச்சிவபரம்பொருளினிடத்து அன்புவையாதாரும் உண்டோ? (இல்லையென்றபடியாம்) எ - று.

(பொ - ரை.) (தலைமைத தன்மை பிறரொருவருக்கு மின்றித் தனக்கே உடைய) சிவபரம் பொருள்; செல்காலம் நிகழ்காலம் எதிர்காலம் என்னும் மூன்றுகாலத்தும் (ஒருதன்மையாய்) நிலைத்திருப்பதாய் (அநாதியே மலமில்லாத) சிறப்பினை உடையதாய், நல்வினை தீவினையென்னும் இருவினைகளில்லாது (மாயாகாரியங்களாலுண்டாகும் இன்பத்திற்கு) மேலான பேரின்பத்தைத்தரும். தெய்வத்தன்மை விளங்கும் பெருமைவாய்ந்த கல்வியினால் மேம்பட்டு விளங்கும் அறிவுடையோர்களுள் ஒப்பில்லாத இந்தச் சிவபரம் பொருளினிடத்து அன்பு வையாதாரும் உண்டோ? இல்லையென்றபடியாம் எ - று.

(க - ரை.) சிவபரம் பொருளே பேரின்பத்தைத் தருமாதலின் அப்பொருளினிடத்து அறிவுடையோர் அன்பு வைப்பர் என்பதாம்.

பதி பசு பாசம் என்னும் மூன்றுபொருள்களும் எக்காலத்தும் உள்ளனவேனும், பசு கேவல சகல சுத்தம் என்னும் அவத்தைப்பட்டும், பாசம் காரியரூபமாய் விரிந்தும் காரணரூபமா யொடுங்கியும் வேறுபடுவனவாம். பதிப்பொருளோ அவ்வாறின்றி என்றும் ஒருதன்மைத்தாய் விளங்கும். இவ்வுண்மை உணர்த்துதற்கு 'ஒருபொருள் எக்காலத்தும் உளதாகி' எனவும், அவ்வாறு வேறுபடாமைக்குக் காரணம் இயல்பாகவே மலமில்லாமை யென்பதுணர்த்துதற்கு 'சிறப்புடைத்தாய்' எனவும், மலமில்லாமையால் அதுகாரணமாக நிகழும் இருவினையில்லை யென்பதும், அவை யில்லையாகவே, பசுபுண்ணியப்பயனாகிய அழியும் இன்பத்திற்குமேலாகிய பேரின்பவடிவை யுடையதாய்த் தன்னிடத்து அன்புடையாருக்குப் பேரின்பத்தை தரும்

# செய்தித்திரட்டு.

**ஆவினிப்பட்டி:**—விவேகானந்தர் கல்விக்கழகத்தின் எட்டாம் ஆண்டு மூன்றாவது கூட்டம், ஆவணி ௧௨ கீழைச்சிவல்பட்டி திரு. லெ. முத்தரசப்பசெட்டியார் தலைமையில் நன்கு நடைபெற்றது. மாணவர் கடவுள் வாழ்த்துப் பாடி 'எல்லாம் தெய்வச்செயல்' 'புரவலர் பெருமை' 'பெண் கல்வி' 'தேசமுன்னேற்றம்' 'தமிழ்மொழிச்சிறப்பு' என்னும் பொருள்பற்றிய சொற்பொழிவுகளை இனிது ஆற்றினர். ஆசிரியர் வந்தனமளிக்கச் சபைநிறைவுற்றது.

**பாரிஸ்டர் அளகப்பசெட்டியார்:**—மலாயா பர்மா நாடுகளைச் சுற்றிப் பார்த்து, வெற்றியுடன் 27—3—34ல் சென்னைக்குவந்து சேர்ந்தனர்.

**வேழமுகத்துப்பிள்ளை:**—உதகமண்டலத்துக்கு 4 மைலிலுள்ள கெராட்டாக்கிராமத்தில், ஒரு துதிக்கையும் இருதந்தங்களும் உள்ள வேழமுகத்துப்பிள்ளையை ஒருமாது பெற்றெடுத்துள்ளாள். தாயும் சேயும் சுகமே யென்றசெய்தி தெரியவருகிறது. இவ்வதிசயம் பார்க்கத் தகுந்ததும் இறைவர் திருவருளை யுணர்த்தவல்லதுமாகும்.

**இயந்திர வூர்தியின் எழிய விலை:**—ஜப்பான் 50 பொன் விலையுள்ள மோட்டார் செய்து முடித்திருப்பதாகவும், அதற்குக் கல்கத்தாவில் ஏஜண்டும் நியமித்திருப்பதாகவும் கேள்விப்பட்டோம். ஆனால், ஜெகொஸ்லாவேகியாவில் இதைவிட விலை குறைவானமோட்டார்தயாராகி வருகிறதாம். அதன் விலை 20 பொன்; அதாவது 270 ரூபாய். எனவே, இனி பைசிகிலைவிட மோட்டார் அதிகமாகிவிடும் போலும்.

**மேட்டூர் அணை:**—கட்டி முடிக்க 9 வருடங்கள் பிடித்தது. 6 கோடியே 80 லட்சம் ரூபா செலவாகி இருக்கிறது. இந்த அணையின் நீளம் ஒரு மைல். உயரம் 176 அடி மதிலின்மேல் அகலம் $20\frac{1}{2}$ அடி. அதில் 16 அடி அகலமுள்ள ரஸ்தா ஓடுகிறது.

**பூமியில் வெந்நீர்,**—பிரபல ருஷ்ய விஞ்ஞானசாஸ்திரிகளில் ஒருவர் நவீன இயந்திரக் கருவிகளின் உதவிகொண்டு 3900 அடியாழத்திற்குப் பூமியில் தோண்டி அங்கிருந்து சூடான தண்ணீரைக் குழாய்கள் மூலம் மொஸ்கோ நகரத்தின் வீடுகளனைத்திற்கும் கொண்டுபோகலாமென்று கூறினார்.

**வங்காளத்தில் வெள்ளப்பெருக்கு:**—வங்காளத்தில் பத்மா ஆறு பெருக்கெடுத்தமையால் அவ்வாற்றோரமாய் 60 மைல் நீளத்தில் உள்ள கிராமங்கள் யாவும் வெள்ளத்தில் அமிழ்ந்தன. 1 லட்சம் ஜனங்கள் வரை வீடுவாசல்களின்றித் தவிக்கின்றனர். பாரல் நதியும் பெருக்கெடுத்திருப்பதால் அந்நதியின் இருபக்கத்திலுமுள்ள கிராமங்கள் யாவும் அமிழ்ந்தன. பயிர்கள் யாவும் நாசமாயின.

**நூதனத் துப்பாக்கி:**—கிளைட் பாரல் என்பவர் ஒரு நூதனமான துப்பாக்கி கண்டுபிடித்திருக்கிறார். அதில் ஒரே தடவையில் 700 குண்டுகள் போட்டு உபயோகிக்கமுடியும்.

**திருவல்லிக்கேணி:**—வேதாகமோக்த சைவசித்தாந்த சபையின் துணைத்தலைவராயிருந்த திரு. கா. ஆலால சுந்தரம் பிள்ளையவர்களின் பனிரண்டாவது குருபூசை இம்மதி ௧௨-இவ்வூர் நம்பாலீஸ்வரர் ஆலயத்தில் நடைபெறும்.

## சைவசித்தாந்த மகாசமாஜத்தின் விசேஷமகாநாடு.

திருக்கோவலூராதீனம் திருப்பாதிரிப்புலியூர் ஸ்ரீமத் ஞானியார் மடாலயத்தலைவர், உயர்திரு. சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாசாரியசுவாமிகள் அவர்கள் தலைமையில் இம்மதி ௨௨ (21—9—1934) வெள்ளிக்கிழமை முதல் மூன்று நாட்கள்வரை, மயிலாப்பூர் சங்கீத சபையார் ஆதரவில் திருமயிலாப்பூர் கபாலீசுவரர் சந்நிதிக்கெதிரிலுள்ள நடுத்தெருவில் கோபால நாயகர் வன்னியசங்க ஸ்கூல் சபாமண்டபத்தில் நடைபெறும் என சமாஜ உதவித்தலைவர்களும் காரியதரிசியும் அன்பர்களை யழைக்கின்றார்கள்.

### விரிவுரையாற்றும் திருவாளர்கள்.

1. கி. குப்புசாமி முதலியார், திருக்குறள் விளக்க ஆசிரியர்.
2. அ. கந்தசாமிப் பிள்ளை, தமிழாசிரியர், அரசாங்க மகமதியர் கல்லூரி.
3. ஈ. த. இராஜேஸ்வரியம்மாள், எம். ஏ., எல். டி., உதவியாசிரியர், இராணி மேரிப்பெண் கல்லூரி.
4. சி. எஸ். சுவாமிநாத முதலியார் பி. ஏ., அமைச்சர், சென்னை ஹிந்து சமயப் பாதுகாப்புக் கழகம்.
5. எஸ். அனவரத விநாயகம் பிள்ளை, எம். ஏ., எல். டி., தலைமையாசிரியர், சென்னை, பல்கலைக் கழகத் தமிழாராய்ச்சிப் பகுதி.
6. எஸ். வையாபுரிப் பிள்ளை, பி. ஏ., பி. எல்., சென்னை, பல்கலைக் கழகத் தமிழகராதிப் பதிப்பாசிரியர்.
7. தெ. பொ. மீனாட்சி சுந்தரம் பிள்ளை, எம். ஏ., பி. எல்., உயர்தர நீதி மன்ற வழக்கறிஞர்.
8. சுவாமிநாத சாஸ்திரிகள், வடமொழிப்பண்டிதர், மூடிகொண்டான்.
9. ச. சச்சிதானந்தம் பிள்ளை, பி. ஏ., எல். டி., சென்னை, நகராண்மைக் கழகக் கல்விப் பகுதித் தலைவர்.
10. சுவாமிநாத சிவாச்சாரியர், திருமயிலைக் கபாலீச்சரத் தானீகர்.
11. பூ. சமரபுரி முதலியார், மேலெழுத்தாளர், தென்மகா ராட்டிர இருப்புப்பாதை, சென்னை.
12. டி. கே, சிதம்பரநாத முதலியார், பி. ஏ., பி. எல்., சென்னை ஹிந்து சமயப் பாதுகாப்புக் கழக நீதிபதி
13. வி. கல்யாணசுந்தர முதலியார், 'நவசக்தி' ஆசிரியர்.

### சோதாய சோதா.

தீண்டப்படாதார், ஆலயம் புக வேண்டுமென இந்தியா சட்டசபையில் அங்கம் வாய்ந்த அரங்கையர் கொண்டு வந்த மசோதா ஆதரவுக்குறைவாலும், எதிர்ப்பு நிறைவாலும் தன் தலைமறைந்தொழிந்தது. அஹிம்சையே உருவெடுத்து வந்ததாகப் பேசப்படுகின்ற பேர்கள், பண்டைப் பெரியோர்களின் வரன்முறைகளைப் பாழ்படுத்தாமலும் யாதொருபிணக்கின்றித் தத்தம் கடமைகளை வரன்முறைநெறிவழி நின்று அநுட்டித்து வருகின்ற மக்கட் கூட்டத்தினர்க்குப் பேதவுணர்ச்சியைக் கிளப்பிவிட்டுத் துன்புறுத்தாமலும், இருப்பதே அஹிம்சையா மென்பதை நினைவு கூர்ந்து, மேலுங் கலாம்விளைக்கா திருப்பார்களானால், அன்னாரைப் போற்றுவாரைப் போற்றுவோம். மசோதாவால் வருந்தி, அரசாங்க சட்டசபையில் ஆண்டவனருளால் அவ்வுபாதை நீங்கப்பெற்ற சநாதனிகளின் மனமகிழ்ச்சியிற் கலந்து இளைப்போமாக.

### 'சிவநேசன்' ஆண்டுத்தொகை விவரம்.

| | |
|---|---|
| உள்நாட்டிற்கு ரூ 2–4–0 | அதற்கு மூலதனம் ரூ 30–0–0 |
| அயல் நாட்டிற்கு ரூ 3–0–0 | அதற்கு மூலதனம் ரூ 40–0–0 |

---

பலவான்குடி 'சிவநேசன்' அச்சியந்திரசாலையில், பத்திராதிபர் நா.ம. கு.ராம. இராமசாமி செட்டியாரால் அச்சியற்றி வெளியிடப்பெற்றது.